

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 156 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 30 – திங்கள்கிழமை 15 ஜனவரி 2024 – திருச்சி ★ ★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 156 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 30 - Monday 15 January 2024 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


# இனிய பொங்கல் இந்தியப் பொங்கல் ஆகட்டும்!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் பொங்கல் - தமிழர் திருநாள் வாழ்த்து மடல்.**

உலகெங்கும் வாழும் தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாகப் பொங்கல் நன்னாள் கொண்டாடப்படுகிறது. இது உழைப்பின் மேன்மையைப் போற்றும் திருநாள். உழுது விளைவித்து அறுவடை செய்த நெல்லை அரிசியாக்கிப் பொங்கல் வைத்து, அந்த விளைச்சலுக்குக் காரணமான இயற்கை ஆற்றலாம் சூரியனுக்கும், உழவுக்குத் துணையாய் இருந்த கால்நடைகளுக்கும் நன்றி செலுத்துகிற நன்னாள்! சாதி-மத பேதமற்ற சமத்துவத் திருநாள்! ஆரியப் பண்பாட்டுத் தாக்கம் ஏதுமின்றி, திராவிடர்களாம் தமிழர்களின் தனிச் சிறப்புமிக்க தொன்மைமிகு பண்பாட்டின் கொண்டாட்டமாக அமைந்திருப்பது, தை முதல் நாளாம் பொங்கல் திருநாள்!

**“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பது தமிழர்களின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையைத் தமிழ்நாட்டுத் தமிழர்கள் இழந்து விடாத வகையில், கடந்த 2023-ஆம் ஆண்டு இறுதியில் தமிழ்நாடு எதிர்கொண்ட மிக்ஜாம் மழை வெள்ள இயற்கைப் பேரிடர் பாதிப்பிலிருந்து மக்களைக் காப்பதிலும் மீட்டெடுப்பதிலும் நமது திராவிட மாடல் அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றியது.**

கடும் பேரிடர்களாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் புதுடெல்லியில், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் நானே நேரில் சென்று வலியுறுத்தியபோதும், அத்தகைய அறிவிப்போ, தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கான நிதியோ வரவில்லையென்றாலும், நம் மக்களைக் காக்க வேண்டிய கடமையை உணர்ந்து, மழை - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 6000 ரூபாய் நிதி வழங்கியதுடன், வீடுகளை இழந்த குடும்பத்தினர், படகுகள் சேதமான மீனவர்கள், உயிரிழப்புகளை எதிர்கொண்டவர்களின் குடும்பத்தினர், பயிர்கள் பாதிக்கப்பட்ட உழவர்கள், தொழில் முடங்கிய வணிகர்கள் எனப் பல்வேறு தரப்பினருக்கான நிவாரணத் தொகையையும் உயர்த்தி அறிவித்து வழங்கி வருகிறது திராவிட மாடல் அரசு.

வணிகர்களுக்கான கடன் வழங்கும் முகாம்கள், முக்கியமான சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு மாற்றுச் சான்றிதழ்கள் வழங்கும் முகாம்கள், நோய்த்தொற்று ஏற்படாமல் இருப்பதற்கான மருத்துவ முகாகம்கள் ஆகியவை தொடர்ந்து நடைபெற்றுள்ளன.

முதலமைச்சர் என்கிற பொறுப்பில் உள்ள உங்களில் ஒருவனான நான் இந்தப் பணிகளை மேற்கொண்ட வேளையில், என்னை முதலமைச்சராக் கிட அயராது உழைத்த அன்பு உடன்பிறப்புகளாம் தி.மு.கழகத்தின் நிர்வாகிகளும் தொண்டர்களும் அவரவர் பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி, அவர்களின் துயர் துடைக்கும் கைகளாகச் செயல்பட்டீர்கள். கழகத்தினரின் இத்தகைய செயல்வேகம் குறித்த செய்திகள்தான் என்னுடைய பணிக்கு ஊக்கம் தரக்கூடியவை; மக்களுக்கான பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள உத்வேகம் அளிப்பவை.

நம் உயிர்நிகர்த் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டு மக்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கிடும் நடைமுறையைக் கொண்டு வந்தார். அந்த எதிர்பார்ப்பு இன்றளவும் மக்களிடம் இருப்பதை உங்களில் ஒருவனான நான் அறிவேன். அதனால்தான் ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என்று திராவிட மாடல் அரசு அறிவித்தது. அத்துடன், ரொக்கத் தொகையும் வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் இருந்தை நான் அறிந்தேன்.

**கடுமையான நிதி நெருக்கடி நிலவிய சூழலிலும் ரொக்கப் பணம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையைப் புறந்தள்ளாமல் பரிசீலித்தேன். சர்க்கரை நாவில் இனிக்கும். ரொக்கப் பணம் மனதில் இனிக்கும் என்பதால் தமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளில் தமிழ்நாட்டுக் குடும்பங்களில் கூடுதல் மகிழ்ச்சி பொங்கிடும் வகையில் 2 கோடியே 19 இலட்சத்து 71 ஆயிரத்து 113 அரிசி அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ஆயிரம் ரூபாய் ரொக்கமாக வழங்கப்பட்டு வருகிறது.** ரொக்கத்துடன் கூடிய இந்த பரிசுத் தொகுப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகை 2,436.19 கோடி ரூபாய் ஆகும். அத்துடன் 1 கோடியே 77 இலட்சம் சேலைகளும் வேட்டிகளும் ஏழை - எளிய மக்களுக்கு பொங்கல் பரிசாக நியாய விலைக் கடைகள் மூலம் இந்த ஆண்டுதான் பொங்கலுக்கு முன்பே வழங்கப்படுகின்றன. இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் குடும்பத் தலைவியருக்கு மாதந்தோறும் வழங்கப்படும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் ஆயிரம் ரூபாய், ஜனவரி 10-ஆம் தேதியே அவரவர் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டு, பொங்கலின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியுள்ளது நமது திராவிட மாடல் அரசு.

**எத்தனை நெருக்கடிகள் சூழ்ந்தாலும், நம் மீது நம்பிக்கை வைத்து ஆட்சியை ஒப்படைத்த தமிழ்நாட்டு மக்களின் நலன் காக்கும் அரசாக கழக அரசு தன் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.**

ஜனவரி 7, 8 தேதிகளில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக 6 இலட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி ரூபாய் முதலீட்டினைத் தமிழ்நாடு பெறக்கூடிய வாய்ப்பும், அதன் வாயிலாக 26 இலட்சத்து 90 ஆயிரத்து 657 பேருக்கு வேலை வாய்ப்பு அமையக்கூடிய சூழலும் உருவாகியுள்ளது. சென்னையில் மட்டுமின்றி தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் இந்த முதலீடுகள் மூலமாக தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் அமைக்கப்பட விருப்பதால் பரந்துபட்ட வளர்ச்சியை நோக்கிய பாய்ச்சலைக் காணவிருக்கிறது நமது மாநிலம்.

பொருளாதாரப் பள்ளத்தாக்கில் விழுந்து கிடந்த தமிழ்நாட்டை இரண்டரை ஆண்டுகளில் மிகுந்த பாடுபட்டுச் சமதளத்திற்குக் கொண்டு வந்து, சிகரத்தை நோக்கிப் பயணிக்கச் செய்திருக்கிறது திராவிட மாடல் ஆட்சி. நமது அரசின் இந்த முயற்சிகளை சென்னையில் ஜனவரி 11, 12 தேதிகளில் நடைபெற்ற அயலகத் தமிழர் நாள் விழாவில் பங்கேற்ற உலகத் தமிழர்கள் பலரும் பாராட்டியதுடன், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை நிற்கவும் உறுதியளித்துள்ளனர்.

நமது திராவிட மாடல் அரசின் திட்டங்கள் இன்று இந்தியாவுக்கான முன்னோடித் திட்டங்களாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. விடியல் பயணத் திட்டம், காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களை பிற மாநிலங்கள் பின்பற்றத் தொடங்கியிருப்பதைப் பார்க்கிறோம். மற்ற மாநிலங்களின் தேர்தல் களங்களில் திராவிட மாடல் அரசின் திட்டங்களே வாக்குறுதிகளாக அளிக்கப்படுகின்றன.

**‘எல்லாருக்கும் எல்லாம்’ என்பதே திராவிட மாடல் அரசின் அடிப்படைக் கோட்பாடு. ‘நான்தான் எல்லாம்’ என்கிற போக்கில் செயல்படுகிற ஆட்சியதிகாரம், ஜனநாயகத்திற்குச் சீர்கேடு. அத்தகைய சீர்கேட்டை அகற்றி, ஜனநாயகம் மலர்வதற்கு மாநிலங்களின் உரிமைகளை மதிக்கக்கூடிய கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் செயல்படக்கூடிய ஒன்றிய அரசு 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின் அமைந்திட வேண்டும்.**

இந்தியாவின் பன்முகத்தன்மையைப் பாதுகாக்கக்கூடிய, மதநல்லிணக்கத்தைப் போற்றக்கூடிய, மதவெறிக்கு இடந்தராத, மொழி ஆதிக்கச் சிந்தனையில்லாத, மாநில உரிமைகளுக்கு மதிப்பளிக்கிற ஓர் அரசை அமைப்பதற்கான காலம் கனிந்து வந்துள்ளது. அதற்கான உற்சாகத்தைத் தரும் தொடக்க விழாவாக இந்தப் பொங்கல் திருநாள் அமைந்துள்ளது.

**“பொங்கல் கொண்டாட்டம் தரும் ஊக்கத்தோடு, நமக்குக் காத்திருக்கும் பணிகள் இரண்டு! தாய்த் தமிழ்நாட்டை மேம்படுத்துவது முதலாவது. இந்திய ஒன்றிய அரசில் சமூகநீதி - சமதர்ம மதச்சார்பற்ற நல்லரசை அமைப்பது இரண்டாவது. இவை இரண்டையும் அடைய எந்நாளும் பாடுபடுவோம்.”**

## உங்களில் ஒருவன்

தை பிறக்கிறது. இனி வரும் மாதங்களில் வழி பிறக்கட்டும். தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாகச் “சென்னை சங்கமம்” நிகழ்வில் கேட்கின்ற பறை முழக்கம், தமிழ்நாட்டிற்கான வெற்றி முழக்கமாக அமையட்டும்.

**ஜனவரி 21 அன்று சேலத்தில் நடைபெறுகிற இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு எழுப்புகின்ற ‘மாநில உரிமை மீட்பு முழக்கம்’ டெல்லி வரை அதிரட்டும். “நாற்பதும் நமதே!, நாடும் நமதே!” என்ற நம் இலக்கினை அடைவதற்கு உத்வேகமாகட்டும்.**

எழுச்சிமிகுந்த இளைஞரணி மாநாட்டிற்கான ஆயத்தப் பணிகள் நிறைவடைந்து, தமிழ்நாடு முழுவதும் இளைஞர்கள் பெரும் ஆர்வத்துடன் திரண்டு வரத் தயாராகியுள்ள நிலையில், வதந்திகளையே செய்திகளாகப் பரப்பி வாழ்க்கைப் பிழைப்பு நடத்தி வயிறு வளர்க்கக் கூடிய பிறவிகள், என் உடல்நிலை குறித்து பொய்த் தகவல்களைப் பரப்பிப் பார்த்தனர். அயலகத் தமிழர் நாள் விழாவில் உற்சாகத்துடன் பங்கேற்ற நான், தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சியாக இருக்கும் போது எனக்கென்ன குறைச்சல் என்று கேட்டேன். நான் நலமாகவும் உற்சாகமாகவும் இருக்கிறேன். உழைக்கிறேன்... உழைக்கிறேன்... உழைக்கிறேன்...

**ஒரு பொய் உடைந்து நொறுங்கியதால், அடுத்து ஒரு பரபரப்புக்காக, துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்கப்படவிருக்கிறது என்ற வதந்தியைப் பரப்பத் தொடங்கினர். அதற்கு இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் தம்பி உதயநிதி அவர்களே, “எல்லா அமைச்சர்களும் முதலமைச்சருக்குத் துணையாகத்தான் இருக்கிறோம்” என்று பதிலடி கொடுத்து, வதந்தி பரப்பியோரின் வாயை அடைத்துவிட்டார்.**

**இளைஞரணி மாநாட்டின் மாநில உரிமை முழக்கம் எனும் நோக்கத்தைத் திசை திருப்ப நினைக்கும் எந்த முயற்சிகளுக்கும் கழகத்தினர் யாரும் இடம் கொடுத்திட வேண்டாம். மாநில உரிமைகளைக் காத்து கூட்டாட்சி இந்தியாவை உருவாக்கும் நோக்கத்தைச் செயல்படுத்துவதே, சேலம் இளைஞர் அணி மாநாட்டின் நோக்கமாகும். அந்த நோக்கத்தின் எதிரிகள்தான் இது போன்ற உள்நோக்கம் கொண்ட வதந்திகளைப் பரப்புகிறார்கள்.**

கழகத் தலைவர் என்கிற பொறுப்பு உங்களில் ஒருவனாகிய எனக்கு உடன்பிறப்புகளாகிய உங்களின் ஒப்புதலுடன், பொதுக்குழுவின் ஒட்டுமொத்த ஆதரவுடன் வழங்கப்பட்டிருக்கிற பொறுப்பு. முதலமைச்சர் என்கிற பொறுப்பு உடன்பிறப்புகளின் அயராத உழைப்பிலும் தமிழ்நாட்டு மக்களின் பேராதரவாலும் கிடைத்தது ஆகும். நம்பிக்கை வைத்து பொறுப்பினை வழங்கிய உங்களின் நலனுக்காக, என் சக்திக்கு மீறி உழைக்கின்ற வலிமை என்னிடம் உள்ளது. தலைவர் என்ற உரிமையோடும் அன்போடும் கட்டளையிடுவது, திசை திருப்பும் வதந்திகளில் கவனத்தைச் சிதறடிக்காமல், மாநாட்டின் மைய நோக்கமான, மாநில உரிமை மீட்பு முழக்கத்தை முன்னெடுங்கள்! நாடு தழுவிய அளவில் அதுவே முதன்மைச் செய்தியாகட்டும்!

எப்போதும் பொங்கல் அன்று கழகத் தோழர்கள் என்னைச் சென்னையில் வந்து சந்திப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளீர்கள். இம்முறை கழகத்தின் மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும், உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் அவரவர் பகுதிகளுக்குட்பட்ட இடங்களில் பொது மக்களின் பங்கேற்புடன் தமிழர் திருநாளைச் ‘சமத்துவப் பொங்கல்’ என்று பெயரிட்டு எழுச்சியுடன் கொண்டாட வேண்டும். கழக உடன்பிறப்புகளுக்கும் மக்களுக்கும் பொங்கல் பரிசுகளை வழங்கிடுங்கள். அனைத்து மதத்தினரும், சாதியினரும் கலந்து கொள்ளும் சமத்துவப் பொங்கலாய் இது அமைந்திட வேண்டும்.

குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் எனத் தனித்தனியாகப் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, சல்லிக்கட்டில் வெற்றி பெறும் காளைகள் - மாடுபிடி வீரர்கள் என வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்க வேண்டும்.

கழகத்தினர் அனைவரது இல்லங்களிலும் ‘சமத்துவப் பொங்கல்’ எனக் கோலமிட்டு, அதனைச் சமூக வலைதளங்களில் பகிருங்கள்! அதுதான் தலைநகரில் பொங்கல் கொண்டாடும் எனக்கு நீங்கள் தரும் இனிப்பான பொங்கல் வாழ்த்தாகும்.

**பொங்கல் கொண்டாட்டம் தரும் ஊக்கத்தோடு, நமக்குக் காத்திருக்கும் பணிகள் இரண்டு! தாய்த் தமிழ்நாட்டை மேம்படுத்துவது முதலாவது. இந்திய ஒன்றிய அரசில் சமூகநீதி - சமதர்ம மதச்சார்பற்ற நல்லரசை அமைப்பது இரண்டாவது. இவை இரண்டையும் அடைய எந்நாளும் பாடுபடுவோம்.**

உயிர்நிகர்த் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகள் அனைவருக்கும் உங்களில் ஒருவனின் இனிய பொங்கல் தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்!

அன்புடன்,

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2054
மார்கழி 28
13.01.2024




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.1.2024) சென்னை, தீவுத்திடலில், தமிழ் மண்ணின் கலைகளைக் களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாநகரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் நடத்தப்படும் ”சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவை தொடங்கி வைத்து கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். இந்த விழாவில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர், பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, டாக்டர் கலாநிதி வீராசாமி, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த. வேலு, இ. பரந்தாமன், திருமதி தமிழரசி, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் சே.ரா. காந்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.1.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் 2024ஆம் ஆண்டுக்கான அய்யன் திருவள்ளுவர் விருது தவத்திரு பாலமுருகனடிமை சுவாமி அவர்களுக்கும், 2023ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா விருது பத்தமடை பரமசிவம் அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராசர் விருது உ.பலராமன் அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது கவிஞர் பழநிபாரதி அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது எழுச்சிக் கவிஞர் ம.முத்தரசு அவர்களுக்கும், தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது பேராசிரியர் எஸ்.ஜெயசீல ஸ்டீபன் அவர்களுக்கும், முத்தமிழ்க் பத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் இரா. கருணாநிதி அவர்களுக்கும், 2023ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது தமிழ்நாடு அரசின் சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்களுக்கும், டாக்டர் அம்பேத்கர் விருது பி. சண்முகம் அவர்களுக்கும் வழங்கி, சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.1.2024) தலைமைச் செயலகத்தில், அரசு தலைமை வழக்கறிஞராக பொறுப்பேற்றுக் கொண்ட பி.எஸ். ராமன் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவை தொடங்கி வைக்க வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நினைவுப் பரிசு வழங்கினார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.1.2024) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக INDIA கூட்டணி கட்சிகளின் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். உடன் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.1.2024) சென்னை, தீவுத்திடலில், தமிழ் மண்ணின் கலைகளைக் களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாநகரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் நடத்தப்படும் ”சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவை முழவு இசைத்து தொடங்கி வைத்தார். இந்த விழாவில், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மு.பெ. சாமிநாதன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.கே. சேகர்பாபு, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, டாக்டர் கலாநிதி வீராசாமி, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த. வேலு, இ. பரந்தாமன், திருமதி தமிழரசி, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன்,சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் சே.ரா. காந்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பண்டிகை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று நடந்தது. இதில் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு தொகுதி எம்.எல்.ஏ. எழிலன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

## இதுவரை எந்த முதல்வரும் சந்தித்திராத

# சோதனைகளுக்கிடையே சாதனை படைத்திடும் தளபதி!



**“உலக முதலீட்டாளர் மாநாடு! சாதித்துக் காட்டிய முதலமைச்சர், தலைநிமிரும் தமிழ்நாடு; எப்போதெல்லாம் தி.மு.கழகம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் தமிழ்நாடு மாபெரும் வளர்ச்சியை அடைந்துள்ளது”** என்று, பேரறிஞர் அண்ணா தமிழ்நாட்டு முதலமைச்சராகப் பதவி ஏற்ற காலத்தில் நாட்டில் இருந்த பஞ்சத்தை எடுத்துக்காட்டி, பஞ்சம் பிழைக்கப் பலரும் மும்பை (அன்றைய பம்பாய்) போன்ற மாநிலங்களுக்கு வேலை தேடிச் செல்லுமளவு இருந்த நிலையை விவரித்து, அண்ணா அவர்களும், அவரைத் தொடர்ந்து கலைஞர் அவர்களும் தங்களது ஆட்சிக் காலங்களில் எப்படியெல்லாம் திட்டங்கள் தீட்டி பஞ்சத்தின் கோரப்பிடியில் கிடந்த தமிழ்நாட்டை அதிலிருந்து மீட்டனர் என்பதற்கு அடுக்கடுக்காய் ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி ‘தமிழ்க் கேள்வி’ இணையதள ஆசிரியர், மூத்த ஊடகவியலாளர் திரு.தி.செந்தில்வேல் எழுதிய கட்டுரை ஒன்று, இரு தினங்களுக்கு முன் ‘முரசொலி’யில் வெளிவந்துள்ளதை பலரும் படித்திருப்பார்கள்.



தி.செந்தில்வேல்
‘தமிழ்க் கேள்வி’ இணையதள ஆசிரியர்

தமிழினத் தலைவர், கலைஞர் காலத்தில் தமிழ்நாட்டின் வளர்ச்சி ஒரு பகுதியில் மட்டுமின்றி, தெற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு என எல்லாப்பகுதிகளிலும் பரவி விரிந்திட திட்டங்கள் தீட்டப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டதை அவர் ஆதாரங்களோடு விளக்கியிருப்பது, கண்மூடித்தனமாக கலைஞரை விமர்சிக்கும் அரைவேக்காட்டுக் கூட்டத்திற்குத் தரப்பட்ட கசையடியாய் காட்சியளிக்கிறது.

**1996-ல் கலைஞர், தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற காலகட்டத்தில், கணினியின் பயன்பாடு குறித்து பெரிய அளவு புரிதல்கள் இல்லாத போதே, முத்தமிழறிஞர் கலைஞர் கணினிதான் இனி வரும் காலம் என்பதை உணர்ந்து, கணினி சார்ந்த முதலீடுகளை ஈர்க்க அனைத்து முயற்சிகளையும் தொடங்கிய தன் விளைவால்தான் ‘டைடல் பார்க்’ உள்ளிட்ட ஏராளமான மென்பொருள் பூங்காக்கள் தமிழ்நாட்டில் கால்பதித்தன. இன்று நம் பிள்ளைகள் மென்பொருள் நிறுவனங்களில் லட்சத்தில் ஊதியம் பெறுகின்றனர் என்றால் அதற்கு வித்திட்டது தி.மு.கழக அரசு!**

வளர்ச்சிக்கு இன்றியமையாதவை போக்குவரத்தும், மின்சாரமும்! ஒவ்வொரு கிராமத்துக்கும் மின்சாரத்தைக் கொண்டு போய்ச் சேர்த்தது தி.மு.கழக அரசு.



போக்குவரத்தை நாட்டுடைமையாக்கி, மினி பஸ்களை அறிமுகப்படுத்தி கிராமம், நகரம் என்று எல்லாப் பகுதி மக்களுக்கும் போக்குவரத்து கிடைக்க வசதி செய்ததோடு – அதன்மூலம் கிராமம் – நகரம் எல்லாவற்றையும் இணைத்தது, கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு!

இவற்றை எல்லாம் விலாவாரியாகத் தொகுத்தளித்துள்ள திரு.செந்தில்வேல், கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் தளபதி ஸ்டாலின் தலைமையிலான கழக அரசு செய்துள்ள சாதனைகளையும் நினைவுகூர்ந்து பெருமிதம் கொண்டுள்ளார் அந்தக் கட்டுரையில்!

- ★ **கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு மருத்துவமனை.**
- ★ **மதுரையில் கலைஞர் நூற்றாண்டு பிரம்மாண்ட நூலகம்.**
- ★ **கீழடி அருங்காட்சியகம்.**
- ★ **பள்ளி சிறார்களுக்கு காலை உணவுத் திட்டம்.**
- ★ **பெண் பிள்ளைகளின் உயர்கல்விக்கு மாதம் ஆயிரம் ரூபாய்.**
- ★ **மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம்.**
- ★ **அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்.**

என தளபதி ஸ்டாலினின் சாதனைப் பட்டியலை வெளியிட்டு, இறுதியாக, **இந்தச் சாதனைகளுக்கு வைக்கப்பட்ட மகுடமாக உலக முதலீட்டாளர் மாநாடு அமைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்!**

திரு.செந்தில்வேல் குறிப்பிட்ட நமது முதல்வர் தளபதியின் சாதனைப் பட்டியலில், ‘மகளிருக்கு மாதம் ரூபாய் ஆயிரம் உரிமைத் தொகை’யாகத் தந்திடும் திட்டம், ‘நான் முதல்வன்’ திட்டம் போன்ற பல திட்டங்கள் இடம் பெறவில்லை.

**இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் இத்தனை சாதனைகளா? என்று எண்ணும்போது இதயம் இறும்பூதெய்துகிறது! அதே நேரத்தில், இந்தச் சாதனைகளை சாதித்திட்ட தளபதி, இந்தக் கால கட்டத்தில் சந்தித்த எதிர்ப்புகள் எத்தகையது என்பதை, விருப்பு வெறுப்புகளை மறந்து எண்ணிப் பார்த்தால் பிரமிப்பூட்டுவதாகவே அது உள்ளது!**

தமிழ்நாட்டை ஆண்ட எந்த முதல்வரும் அவர்களது ஆட்சிக் காலங்களில் இத்தகைய தடைகளைச் சந்தித்ததில்லை எனும் அளவு தளபதி, ஆட்சிக் கட்டிலில் ஏறியது முதல் பல தடைகளைச் சந்தித்தார்!

- **கொரோனாவின் உச்சகட்டம்.**
- **மழை, வெள்ளம், புயலின் கோரத் தாண்டவம்; அதுவும் ஒரு முறையல்ல, இரண்டரை ஆண்டு கால ஆட்சியில் இரண்டு மூன்று முறைகள்.**
- **ஒன்றிய சர்வாதிகார ஆட்சியின் எதேச்சதிகார கோரத்தாண்டவம்!**
- **ஆளுநர் என்ற பெயரில், கழக ஆட்சியின் சாதனை வேகத்தைத் தடுக்க அனுப்பிய பேர்வழியின் அட்டகாசம்! எல்லா மக்கள் நலத் திட்டங்களுக்கும் தடை!**
- **அமலாக்கத்துறை, வருமானவரி துறை போன்றவைகளை அனுப்பி, அமைச்சர்களின் பணிகளை முடக்கிடும் வகையில் பல சோதனைகள்! வழக்குகள்!**

– இப்படி எல்லாப் பக்கமிருந்தும் சோதித்த தாக்குதல்களை எதிர்கொண்டு நமது தமிழக முதல்வர் சாதித்த சாதனைப் பட்டியலைக் காணும்போது, ஒவ்வொரு கழகத் தொண்டனும் ‘தான் ஒரு தி.மு.கழகக்காரன்’ என்பதில் பெருமிதம் கொள்கிறான்! பூரிப்படைந்து நெஞ்சு நிமிர்த்தி நடைபோட்டுக் கொண்டிருக்கிறான்!

**எத்தனை காலம் ஆட்சியில் இருந்தோம் என்பதல்ல; இருந்த**



**காலத்தில் நம்மை நம்பியிருக்கும் மக்களின் மகிழ்ச்சிக்கு என்ன செய்தோம்; செய்யப் போகிறோம் என்ற சிந்தனையோடு தூக்கத்தைத் தொலைத்து, ஓய்வுக்கு விடைகொடுத்துச் செயல்படும் தலைவர்களைக் கொண்டிருந்த, கொண்டிருக்கும் ஒரே இயக்கம், தி.மு.கழகம்தான்!**

**“இந்த இயக்கத்தால் தனக்கு என்ன லாபம் என்று கருதிச் செயல்படுபவன், அந்த இயக்கத்தின் புற்றுநோய்! தன்னால் இந்த இயக்கத்துக்கு என்ன லாபம் என எண்ணிச் செயல்படுபவன் அந்த இயக்கத்தின் இரத்தநாளம்”** என, முத்தமிழறிஞர் கலைஞர் கூறியது போல இரத்த நாளங்களாகச் செயல்படும் இலட்சோப இலட்சம் தொண்டர்களை இந்த இயக்கம், கொண்டிருப்பதால், அவர்களது பக்கபலம் என்றும் ஒரு உந்து சக்தியாக இருக்கும் என்பதால்தான், பல திக்குகளிலிருந்தும் வரும் எதிர்ப்புகளை துச்சமென எதிர்கொண்டு – சாதனைகளைப் படைத்து வருகிறார் தளபதி ஸ்டாலின்!



சிலந்தி

**“முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலினாகிய நான்”** – எனக் கூறி அவர் பதவி ஏற்ற நாள் முதல் அவர் சந்தித்து வரும் சோதனைகளை, தமிழகத்தில் இதுவரை முதலமைச்சராகப் பணியாற்றிய யாரும் சந்தித்திருக்க இயலாது! அத்தனை பலமுனைத் தாக்குதல்களையும் சந்தித்து எதிர்கொண்டு, அதேநேரத்தில் மக்கள் நலப் பணிகளையும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார் நமது முதல்வர்! **“மக்கள் மகிழ்ச்சி ஒன்றே தனக்கு மாமருந்து”** – என ஓய்வுக்கு விடை தந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் நமது முதல்வரைக் காணும்போது;

**‘இங்கிவனை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்’ – என ஒவ்வொரு தமிழ் நெஞ்சமும் உவகையில் கூத்தாடத்தானே செய்யும்!**



விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆனந்த தாஸ், சிலம்புச் செல்வன் செல்வன் ஆகியோர் உள்ளனர்.

துணை மேயர் - மு.மகேஷ்குமார் தலைமையில் இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் - சைதை கிழக்கு

# கோட்டூர் ஆர். ராஜ்குமார் இல்ல மணவிழா வரவேற்பு! அமைச்சர் துரைமுருகன் வாழ்த்துகிறார்!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - சா.சி.சிவசங்கர் பங்கேற்பு

சென்னை, ஜன. 15 - சைதை கிழக்குப் பகுதிக் கழக துணைச் செயலாளர் கோட்டூர் ஆர்.ராஜ்குமார் இல்ல மணவிழா வரவேற்பு துணை மேயர் மு.மகேஷ்குமார் தலைமையில் நடைபெறுகிறது. இதில் கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், சா.சி. சிவசங்கர் உள்ளிட்ட கழகத்தினர் வாழ்த்துகின்றனர்.

சைதை கிழக்குப் பகுதி துணைச் செயலாளர் ஆர். ராஜ்குமார் - ஆர்.காஞ்சனா ஆகியோரது மகள் ஆர்.ரம்யா, ஆவடி ரவிச்சந்திரன் - உமாதேவி ஆகியோரது புதல்வர் ஆர். மணிஷ்குமார் ஆகியோரது திருமணம் 21.1.1024 ஞாயிறு காலை 7.30 மணிக்கு -9.00 மணிக்குள்ளாக இராமாபுரம் ஜோதி மகாலில் நடைபெறுகிறது.

மணமக்களின் வரவேற்பு நிகழ்ச்சி 20.1.2024 சனிக்கிழமை இரவு 6.00 மணி முதல் நடைபெறுகிறது. வரவேற்பு நிகழ்ச்சிக்கு துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார் தலைமை தாங்குகிறார். பகுதிச் செயலாளர்கள் - மண்டலக் குழுத் தலைவர்கள் இரா. துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இ.முருகேசன், மு. ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, கோ.சண்முகம், க.மணி, எஸ்.ஜே.சலாம், எஸ்.ரவி, சுணேசன், இ என்.பாபு, மு.மகேஷ்லாரன்ஸ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக பொதுச் செயலாளர் - நீர்வளம் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் துரைமுருகன், மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், சா.சி.சிவசங்கர் மற்றும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.எல்.ஏ.க்கள்.ப.தாயகம்கவி, எஸ். அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா ஆகியோர் வாழ்த்துகின்றனர்.

மேலும் மாவட்ட நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், த.விஸ்வநாதன், சைதை சம்பத் , மா.அன்பரசன், வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார் , களக்காடி எல்லப்பன், த. சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், ந.ராதா கிருஷ்ணன், சைதை மு.இராஜா, எஸ்.ஆரோக்கியராஜ், நேருநகர். எஸ். பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோ கமலநாதன், சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல் ராமன், வழக்கறிஞர் த. பாபு, எஸ்.பிரகாஷ், ஆர். கிருஷ்ணகுமார், ஆர்.சேது ராமன், எஸ்.புவனேஸ்வரி, ஏ.பார்வதி, ஏ.கௌதமன், சே.அருண், ஆ.தேவக்குமரன், மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.ராதாகிருஷ்ணன், என். .நந்தகோபால், டி.வி.நரசிம்மன், க.உமாபதி, ஜி.செல்வகுமார், சு.சேகர், வே.ரமேஷ்குமார், ஜி.யோவான், வே.முருகன், ஏ.மஜீத், கோ.மதிவாணன், கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி , கிண்டி ஆர்.எல்.செல்வம், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்.ஜெய்சிங், ஆர்.ரவி, சைதைஜி.பாபு மற்றும் எஸ்.கர்ணன், எம். குமார், விக்டோரியா அன்பு, கே.அரிபாபு, எஸ். ராஜா,ஜி.மேனகா, ஏ.கே. என்.உதயகுமார், ஆர்.நரசிம்மன், கு.சந்திரன், க. ராஜன், சிஎல்ஆர்ஜ.பழனி, ஏ.கருணாகரன், ஆர்.நந்தகுமார், க.ரகுநாதன், வி. ரமேஷ், க.பார்த்திபன், எல்.வெற்றிச்செல்வன், த. .ராஜா ,வி.தரணிஜி. குமார், எம்.வெங்கடேசன் ,வி.தேவா, ச.கங்காதரன், கே.கேசவன், ஜி.பாஸ்கர், கே.வேலாயுதம், எஸ்.ஆறுமுகம், எம்.ரமணி, எஸ். ஆறுமுகம், எம்.ரமணி, இ. ஜெ. .ஜேம்ஸ்குமார், இ. வினோத்குமார், எஸ். ராஜா, எஸ்.பாலாஜி, சி. ராஜசேகர், கே.இளவழகன், வி.லோகநாதன், த.விஜயபிரபாகரன்,

பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் எஸ்.ரமேஷ், விக்டர் பென்னிஇளமன், ஆர். எஸ்.கருணாகரன், க.சுப்பிரமணி, கே.கே.மோகன், கோ.ராஜன், கா.கவின்குமார், பா.சுரேஷ்குமார், பி.செல்வமணி ,பி.குமார், எம்.ராமு, எஸ்.ஈஸ்வரன், க. சரவணபெருமாள், பி. ஜோசப், டி.தனசேகர், கோ.முத்துசாமி, எஸ்.ஆல்பட் இர்பான், ஏ.சத்யா, ஆர்.ரத்தினம், க.விஸ்வநாதன், சி.குணசேகரன், ஜே.கௌசல்யா ,வி.சேகர், ஏ.அப்சல்பாஷா, ஜே. ஜெகன்நாதன், க.ஜெய்வேல் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.1,000/ ரொக்கம், இலவச வேட்டி, சேலைகளையும் வழங்கிடும் பணியினை தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு, ரூ.1,000/ ரொக்கம், இலவச வேட்டி, சேலைகளையும், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். உடன் அறந்தாங்கி சரக துணைப் பதிவாளர் ஆறுமுகப்பெருமாள், கூட்டுறவு சார்பதிவாளர் கோ.அன்னலெட்சுமி, பொதுவிநியோகத் திட்ட கூட்டுறவு சார் பதிவாளர் மற்றும் செயலாட்சியர் செல்வி.ஷியாமளா, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க செயலாட்சியர் மெய்யர், வட்டாட்சியர் புவியரசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

சைதாப்பேட்டை ஜோதியம்மாள் நகர்

# ராமமூர்த்தி மூளைச்சாவு - உடலுறுப்புகள் தானம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அரசு மரியாதை செலுத்தினார்!

சென்னை, ஜன.15- சென்னை, சைதாப்பேட்டை, ஜோதியம்மாள் நகர் பகுதியைச் சார்ந்த ராமமூர்த்தி (வயது 27) என்பவர் மூளைச்சாவு அடைந்து அவரது உடலுறுப்புகள் தானமாக பெறப்பட்டது. இதில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவரது உடலுக்கு அரசு மரியாதை செலுத்தினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (13.01.2024) சென்னை, சைதாப்பேட்டை, ஜோதியம்மாள் நகர் பகுதியைச் சார்ந்த ராமமூர்த்தி (வயது 27) என்பவர் மூளைச்சாவு அடைந்து அவரது உடலுறுப்புகள் தானமாக பெறப்பட்டதைத் தொடர்ந்து, அவரது திருவுடலுக்கு அரசு மரியாதை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:- சென்னை, சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட, ஜோதியம்மாள் நகர் பகுதியைச் சார்ந்த ராமமூர்த்தி (வயது 27) என்கின்ற இளைஞர் கடந்த நான்கு நாட்களுக்கு முன் அண்ணாசாலையை கடக்கும்போது சாலை விபத்தில் சிக்கி மூளைச்சாவு அடைந்து இருக்கிறார். அவரின் உயிரை மீட்பதற்கு இராயப்பேட்டை அரசு மருத்துவமனை நிர்வாகம் பெரிய அளவில் முயற்சி செய்திருக்கிறார்கள் என்றாலும்கூட விபத்து தலையில் ஏற்பட்ட சூழலில் மூளைச்சாவு அடைந்திருக்கிறார்.

அவருடைய தந்தை சண்முகவேல் உடனடியாக அவரது உடலுறுப்புகளை தானம் செய்வதற்கு முன்வந்திருக்கிறார். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் கடந்த 23.09.2023 அன்று தமிழ்நாட்டில் உடலுறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு

மரியாதை செய்யப்படும் என்கின்ற அறிவிப்பு வெளியிட்டார்.

அந்த வகையில் அறிவிப்பு வெளியிடப்பட்ட முதல் வாரத்திலேயே தேனி மாவட்டம், சின்னமனூரில் உள்ள அரசு ஊழியர் ஒருவர் மூளைச்சாவு அடைந்து அவருடைய உடலுறுப்புகள் தானமாக பெறப்பட்டது. இந்நிகழ்வில் நான் நேரிடையாக கலந்து அரசு மரியாதை செலுத்தினேன். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதிலும் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட மூன்று மாதத்தில் 61 பேர் மூளைச்சாவு அடைந்த பிறகு அவரது குடும்பத்தினர் விருப்பத்தின் பேரில் உடலுறுப்பு தானம் செய்திருக்கிறார்கள்.

கடந்த 2022-ஆம் ஆண்டு ஒட்டுமொத்தமாக உடலுறுப்பு தானம் செய்தவர்களின் எண்ணிக்கை 156. அந்த ஆண்டு உடலுறுப்பு தானம் செய்ததில் இந்தியா முழுவதிலும் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு சார்பில் Best State Award வழங்கப்பட்டிருக்கிறது. 2023-ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பிற்கு பிறகு மூன்று மாதத்தில் மட்டும் 61 பேர் உடலுறுப்பு தானம் செய்திருக்கிறார்கள்.

அதற்கு முன்னால் உடலுறுப்பு தானம் செய்தவர்கள் 117 பேர் என மொத்தம் 178 பேர் செய்திருக்கிறார்கள். ஆகையால் 2023ஆம் ஆண்டிலும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிக உடலுறுப்பு தானம் செய்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். 2022-ஆம் ஆண்டை விட கடந்த 2023-ஆம் ஆண்டு உடலுறுப்பு தானம் செய்தவர்களின் எண்ணிக்கை 11.4% அதிகரித்திருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு பிறகு 3958 பேர் தங்களுடைய மறைவிற்கு பின்னால் உடலுறுப்பு தானம் செய்வோம் என்று பதிவு செய்திருக்கிறார்கள். 2024ஆம் ஆண்டு தொடங்கி 13 நாட்கள் நிறைவு பெற்றிருக்கும் இந்நாளில் தோழர் ராமமூர்த்தி அவர்களுடன் சேர்த்து 11 பேர் உடலுறுப்பு தானம் செய்திருக்கிறார்கள்.

இப்படி உடலுறுப்பு தானம் செய்துவரும் நிலையில் உடலுறுப்பு வேண்டி காத்திருப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கின்றது. சிறுநீரகம் வேண்டி காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 6,322 பேர், கல்லீரல் 438 பேர், இதயம் 76 பேர், நுரையீரல் 64 பேர், இதயமும் நுரையீரலும் வேண்டி காத்திருப்பவர்கள் 25 பேர், கைகள் வேண்டி காத்திருப்பவர்கள் 27 பேர், சிறுகுடல் 2 பேர், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் 40 பேர், சிறுநீரகம் மற்றும் கணையம் 42 பேர், கணையம்/சிறுகுடல்/வயிறு ஒருவர் என மொத்தம் 7031 பேர் உடலுறுப்பு தானம் வேண்டி காத்திருக்கிறார்கள்.

மேலும் கடந்த ஆண்டு 178 உடலுறுப்புகள் தானம் பெறப்பட்டு 1000 பேர் பயன்பெற்று இருக்கிறார்கள். இவரது உறுப்புகள் 7 பேருக்கு பயன்பெற்றிருக்கிறது. இவரது கல்லீரல் ரேலா மருத்துவமனையில் உள்ள ஒருவருக்கும், ஒரு சிறுநீரகம் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், இன்னொரு சிறுநீரகம் அரசு இராயப்பேட்டை மருத்துவமனைக்கும், இதயம் ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைக்கும், தோல் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் பயன்பெற்றிருக்கிறது. இவர் இறந்தும் இன்று ஏழு பேரிடத்தில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், தமிழ்நாடு உடலுறுப்பு ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் மரு. கோபாலகிருஷ்ணன், வருவாய் கோட்டாட்சியர் (தெற்கு) அருளானந்தம், மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ், கிண்டி வட்டாட்சியர் சுரேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில்

# பேருந்துகள் இயக்கப்படுவது - பயணிகளுக்கு கூடுதல் வசதி!

## தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா தலைமையில் ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, ஜன.15 - அரசு தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கிளாம்பாக்கம் “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் “ அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்படுவது குறித்தும் மற்றும் பயணிகளுக்கு தேவையான கூடுதல் வசதிகள் குறித்தும் பல்வேறு துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

முதலமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் 88.52 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய பேருந்து நிலையங்களுள் ஒன்றான “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை” 30.12.2023 அன்று திறந்து வைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். இப்பேருந்து முனையத்தை முழுமையாக மக்கள் மகிழ்ச்சியோடு பயன்படுத்துகின்ற அளவிற்கு அனைத்து தேவையான கூடுதல் வசதிகளும் செய்யப்பட்டு வருகிறது.

நேற்று (13.01.2024) பொங்கல் பண்டிகையை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம் “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை” அரசு தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, இம்முனையத்திலிருந்து போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்படுவது குறித்தும் மற்றும் பயணிகளுக்கு தேவையான கூடுதல் வசதிகள் குறித்தும் பல்வேறு துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

அரசு தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கிளாம்பாக்கம் “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து” தென்மாவட்டங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்து முனையம் திறக்கப்பட்ட நாளிலிருந்து படிப்படியாக பேருந்துகள் இயக்கப்படுகிறது. ஒரே சமயத்தில் அனைத்து பேருந்துகளும் இயக்க முடியாது. அரசு விரைவு போக்குவரத்து கழகப் பேருந்துகள் (SETC) இம்முனையத்திலிருந்து இயங்கி கொண்டு வருகிறது. பொங்கலுக்கு பிறகு, இம்முனையத்திலிருந்து தென் மாவட்டங்களுக்கு ஆம்னிப் பேருந்துகள் (Omni Buses) 24.01.2024 முதல் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்பொழுது சென்னை மாநகர் போக்குவரத்து கழகப் பேருந்துகள் (MTC) போதுமான அளவு தேவைக்கேற்ப இயக்கப்பட்டு வருகிறது. இம்முனையத்தில் இருந்து பயணிகளின் தேவைக்கேற்ப இன்று மட்டும் சுமார் 4000 நடைகள் (Trips) சென்னை மாநகர் போக்குவரத்து கழக பேருந்துகள் இயக்கப்பட்டன. இம்முனையத்தில் இயக்கப்பட்டு வரும் பேருந்துகள் சீரான நிலையில் இயக்குவதற்கும் மற்றும் பொது மக்களுக்கு எந்த ஒரு குழப்பம் இல்லாமல் படிப்படியாக அனைத்து பேருந்துச் சேவைகளும் தொடர்வதற்கும் இக்கூட்டம் நடைபெற்றது.

இம்முனையத்தில் பயணிகளுக்கு செய்யப்பட்டிற்கும் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, பயணிகள் உதவி மையம், பயணிகளை ஏற்றி செல்லும் மின்கல ஊர்திகள், மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்தியேக மின்கல ஊர்தி (Battery Vehicle for Differentlyabled Persons), பயணிகள் பிரதான முனையத்திலிருந்து சென்னை மாநகர் போக்குவரத்து கழகப் பேருந்து முனையத்திற்கு சுலபமாக வருவதற்கு மாற்று பாதை (MTC Plaza) அமைக்கப்படுவது மற்றும் உணவகங்கள் போதுமான அளவில் உள்ளனவா என இன்று ஆய்வு செய்யப்பட்டது. மேலும் பயணிகளிடம் விசாரித்த போது, இம்முனையத்தில் தேவையான அனைத்து வசதிகள் உள்ளது எனவும் தெரிவித்தனர். குறிப்பாக பயணிகளுக்கு ஆங்காங்கே பேருந்து வழித்தட நடைமேடை பலகை (Platform Destination Boards) போதுமான அளவில் வைக்க தெரிவித்தனார். மேலும் இம்முனையத்தில் பயணிகள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் டிஜிட்டல் அறிவிப்பு பலகை (Digital Signage Boards) வைப்பதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இப்பேருந்து முனையத்தை “பிளாஸ்டிக்இல்லா முனையமாக” (Plasticfree Zone) செயல்படவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, தாம்பரம் காவல் ஆணையாளர் / கூடுதல் தலைமை இயக்குநர் முனைவர் அ.அமல்ராஜ், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம் (CUMTA) சிறப்பு அலுவலர் ஐ.ஜெயக்குமார், ஐ.ஆர்.டி.எஸ்., போக்குவரத்துத் துறை ஆணையர் அ.சண்முகசுந்தரம், மாநகர் போக்குவரத்துக் கழக (MTC) மேலாண்மை இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், தாம்பரம் மாநகராட்சி ஆணையர் திருமதி. ஆர். அழகுமீனா காவல் துணை ஆணையர்கள் (தாம்பரம் சட்டம் மற்றும் ஒழுங்கு) பவன் குமார், (போக்குவரத்து) ந.குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி.அனாமிகா ரமேஷ், உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்த் குமார் சிங், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



கும்பகோணம் சட்டமன்ற தொகுதியின் சார்பாக, சமத்துவப் பொங்கல் விழா, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவில், தமிழர்களின் பாரம்பரிய கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலும், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், தனது சொந்த நிதியிலிருந்து, 1000 பெண்களுக்கு புடவைகளையும், 300 ஆண்களுக்கு வேஷ்டி மற்றும் துண்டுகளையும் வழங்கினார். நிகழ்ச்சியில், கும்பகோணம் மாநகராட்சி துணை மேயரும், மாநகர தி.மு.க. செயலாளருமான சு.ப.தமிழழகன், கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவரும், கும்பகோணம் மத்திய ஒன்றிய திமுக செயலாளருமான தி.கணேசன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவரும், கும்பகோணம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளருமான எஸ்.கே.முத்துசெல்வம், கும்பகோணம் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் ஜெ.சுதாகர், தஞ்சை மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர்களின் கூட்டமைப்பு குழுத் தலைவர் ஆர்.கே.பாஸ்கர் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய – மாநகர பேரூர் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள், பகுதி கழக செயலாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், கூட்டுறவு சங்க நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கலைஞர் நகரில் பொங்கல் தொகுப்பு வழங்கல்!

சென்னை, ஜன. 15 - சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்குப் பகுதி 137 ஆ வட்டக் கழகத்தினருக்கு வட்டச் செயலாளர் ஆ.கதிரேசன் ஏற்பாட்டில் தமிழர் திருநாளையொட்டி 12.1.2024 அன்று வட்டக் கழக அலுவலகத்தில் கழகத்தினர் - பொதுமக்கள் என 500 க்கும் மேற்பட்டோருக்கு பொங்கல் பரிசு வழங்கப்பட்டது.

தமிழர் திருநாள் பொங்கல் திருநாளையொட்டி, மாவட்டச் செயலாளரும அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப் படி, 137 ஆ வட்டக் கழகத்தினர் 500 க்கும் மேற்பட்ட நபர்களக்கு பொங்கல் பரிசாக வேட்டி- சட்டை, பேண்ட், சட்டை , சேலை ஆகியவற்றை வட்டச் செயலாளர் அ.கதிரேசன் ஏற்பாடு செய்தார்.



சேலம் மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆச்சாங்குட்டப்பட்டி ஊராட்சி, அடிமை புதூர் ,கத்திரிப்பட்டி, மாசிநாயக்கன்பட்டி ஊராட்சி, ராமகிருஷ்ணாபுரம், சக்தி நகர், மின்னாம்பள்ளி ஆகிய பகுதிகளில் தமிழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்பினை நியாயக் விலைக் கடையில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளரும் முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான ஏ. விஜயகுமார் வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய குழு துணை தலைவர் புவனேஸ்வரி செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் கோபால், பேரூராட்சி தலைவரும் பேரூராட்சி செயலாளருமான செல்வராஜ் ,பேரூராட்சி துணைத் தலைவர் செல்வ சூரியா சேதுபதி ,ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆபரணம், காந்திமதி,ஒன்றிய குழு உறுப்பினர் ஆறுமுகம், சின்னச்சாமி, ஏற்காடு தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி உதயகுமார் ,ஊர் கவுண்டர் ராஜேந்திரன், குட்டி (எ) முத்துக்குமார், ராஜேந்திரன் , தளபதி சரவணன், மாதேஷ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம், தலைஞாயிறில் அமைந்துள்ள மீன் வளப் பல்கலைக்கழகம், மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையக் கல்லூரியின் புதிய கட்டிடங்களை மீன் வளம், மீனவர் நலன்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். உடன் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா.குமார், மாவட்டக் கழக துணைச் செயலாளர் சோ.ரவிச்சந்திரன், கற்பகம், தலைஞாயிறு பேரூர் கழகச் செயலாளர் சி.சுப்பரமணியன் மற்றும் பலர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்ட பெருந்திட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட 4 இடங்களில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி ஜனவரி 19–ஆம் தேதி முதல் 31–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இப்போட்டி குறித்த பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில் விழுப்புரம் மாவட்டத்துக்கு வந்த கேலோ அலங்கார ஊர்தியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கொடியசைத்து விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை அனுப்பி வைத்தார்.உடன் விழுப்புரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் லட்சுமணன், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி,மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயச்சந்திரன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## 2024-ஆம் ஆண்டு இறுதிக்குள்

# 2,000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்படும்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜன.15-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் திருக்கோயில்களின் கட்டண சேவைகளில் விரைவாக கட்டண சீட்டுகளை வழங்கிடும் வகையிலும், கட்டணச் சீட்டு மையங்களில் கூட்டத்தினை தவிர்க்கவும், பக்தர்கள் எளிய முறையில் பற்று அட்டை மற்றும் கடன் அட்டை மூலமாக கட்டணச் சீட்டு பெறும் வகையில் இரண்டாம் கட்டமாக, 260 திருக்கோயில்களுக்கு 315 கையடக்க கருவிகளை மண்டல இணை ஆணையர்களிடம் வழங்கினார்.

பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்து சமய அறநிலையத்துறையில் வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்ப வசதிகளை செயல்படுத்தி பல்வேறு வசதிகளை பக்தர்களின் தேவைகளுக்காகவும் திருக்கோயில்களின் வரவு செலவுகள் சரியான முறையில் பராமரிப்பதற்காகவும், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். முதற்கட்டமாக கடந்தாண்டு 550 திருக்கோயில்களுக்கு 1,700 கையடக்க கட்டணக் கருவிகளை வழங்கினோம். அதன்மூலம் ரூ.210 கோடி கட்டணங்களாக கிடைக்கப்பெற்றுள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக இருப்பதால் அதனை விரிவுப் படுத்திடும் வகையில் இன்றைய தினம் 260 திருக்கோயில்களுக்கு 315 கையடக்க கட்டணக் கருவிகள் வழங்கியுள்ளோம். இதன் மூலம் திருக்கோயில்களில் கட்டணச் சீட்டு பெறுவதற்கும் நன்கொடைகள் வழங்குவதற்கும் பக்தர்களுக்கு சுலபமாக இருக்கும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 1,224 திருக்கோயில்களில் குடமுழுக்குகள் நடைபெற்றுள்ளது. இந்த மாத இறுதிக்குள் மேலும் 40 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் 2,000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்திடும் வகையில் செயலாற்றி கொண்டிருக்கிறோம்.

மன்னர்களாலும், மூதாதையர்களாலும் கட்டப்பட்ட 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மையான திருக்கோயில்களாக 717 திருக்கோயில்கள் கண்டறியப் பட்டுள்ளன. அவற்றை பாதுகாத்து புனரமைக்க முதலமைச்சர் அவர்கள் அரசு மானியமாக ரூ.200 கோடியும், உபயதாரர்கள் ரூ.130 கோடியும் வழங்கி இருக்கின்றார்கள். இதன் மூலம் 100 க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

வரும் ஆண்டில் 80 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கும் பணிகளும், நிலங்களை அளவீடு செய்து காக்கும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை ரூ.5,558 கோடி மதிப்பிலான 6,071 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டிருப்பதோடு, 1.55 லட்சம் ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்து பாதுகாக்கப்பட்டுள்ளன.

முருகப் பெருமான் திருக்கோயில்களில் தைப்பூச விழாவினை சிறப்பாக கொண்டாடிடும் வகையில் அனைத்து துறைகளுடன் ஒருங்கிணைந்து முன்னேற்பாடு பணிகளை மேற்கொண்டு நடத்திட இணை ஆணையர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டு இலகுவாகவும், விரைவாகவும் தரிசனம் செய்திட ஏற்பாடுகள் செய்யப்படும்.

அறுபடை வீடு ஆன்மிகப் பயணம் வருகின்ற ஜனவரி 28-ஆம் தேதி சென்னையில் தொடங்க இருக்கின்றது. 60 வயது முதல் 70 வயது வரையிலான 1,000 பக்தர்கள் 5 குழுக்களாக அழைத்து செல்லப்பட உள்ளனர். முதல் குழுவில் 200 பக்தர்களோடு இணை ஆணையர் ஒருவரும், மருத்துவ குழுவினரும் செல்வார்கள்.

இராமேசுவரம் - காசி ஆன்மிகப் பயணத்தில் இந்தாண்டு 300 நபர்கள் அழைத்து செல்லப்படுகின்றனர். இதற்காக அரசு ரூ.75 லட்சம் மானியமாக வழங்கி உள்ளது. முதல் குழுவில் 60 நபர்கள் பிப்ரவரி 1-ந் தேதி புறப்படுகின்றனர். இவர்களுடன் அலுவலர்கள் மற்றும் மருத்துவ குழுவினர் உடன் செல்வர். இது போன்ற பல்வேறு புதிய திட்டங்களை இந்து சமய அறநிலையத்துறை பக்தர்களுடைய சேவைக்காகவும், இறை தரிசனத்திற்காகவும் தொடர்ந்து செய்து வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் தவறு எங்கு நடந்திருந்தாலும் எந்த காலத்தில் நடந்திருந்தாலும் அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். திருச்செந்தூர் முருகன் கோயிலில் நகைகள் தொடர்பாக தணிக்கை அலுவலர்கள் தெரிவித்த தவறுகள் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு நடந்த தவறுகள் இல்லை என்றிருந்தாலும் அதன்மீது உரிய விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க திருக்கோயில் இணை ஆணையருக்கும், மண்டல இணை ஆணையருக்கும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. அந்த அறிக்கை பெற்றவுடன் தவறு யார் செய்திருந்தாலும் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க இந்த அரசும் இந்து சமய அறநிலையத்துறையும் தயங்காது.

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தபின் முதற்கட்டமாக அரசு விரைவுப் போக்குவரத்து கழக பேருந்துகள் அங்கிருந்து இயக்கப்படுகின்றன. விரைவில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழக பேருந்துகளும், ஆம்னி பேருந்துகளும் அங்கிருந்து இயக்கப்படும். கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு செல்லுகின்ற பேருந்துகள் இன்னும் ஒரு வருட காலத்திற்கு இயக்கப்படும். கிளாம்பாக்கத்தில் ரயில் நிலையம் அமைப்பதற்கும், பேருந்து முனையத்திற்கு ஆகாய நடை மேம்பாலம் அமைப்பதற்கும், தேசிய நெடுஞ்சாலையில் பாதசாரிகளுக்காக நடைமேம்பாலமும் அமைப்பதற்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோயம்பேடு பேருந்து நிலையத்திருந்து இயக்கப்படும் அனைத்து பேருந்துகளும் கிளாம்பாக்கத்திலிருந்து இயக்கப்படும் நிலையில் கோயம்பேடு பேருந்து நிலையம் அமைந்துள்ள இடத்தினை மக்களின் பயன்பாட்டிற்கு உகந்த வகையில், அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்த பின்னர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று இறுதி முடிவினை எடுக்கும். ஆகவே தற்போது இதில் தேவையற்ற சர்ச்சையை கிளப்ப வேண்டாம்.

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் சிங்கிள் விண்டோ சிஸ்டத்தில் ஒப்பந்தம் எடுத்தவர்கள் படிப்படியாக கடைகளை அமைத்து வருகிறார்கள். தற்போது அரசு சார்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இரண்டு ஆவின் பாலகங்கள் முழுமையாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிவறைகள், மருத்துவமனை ஆகியவை செயல்பாட்டில் உள்ளன. அனைத்து பேருந்துகளும் முழுமையாக இயக்கப்படுகின்ற போது அனைத்து கடைகளும் செயல்பாட்டிற்கு வரும். மக்கள் தேவைக்கேற்ப அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து எடுப்பதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டிருக்கின்றார். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும் அதற்குண்டான முயற்சிகளில் இறங்கி இருக்கின்றது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, தனி அலுவலர்கள் (ஆலய நிலங்கள்) திருமதி கோ.விஜயா, திருமதி சு.ஜானகி, இந்தியன் வங்கியின் செயல் இயக்குநர் மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

## உரிய நிவாரணத் தொகையை

# ஒன்றிய அரசு வழங்கும் என்று - நம்பிக்கை கொள்வோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜன.15

தமிழ்நாட்டுக்கு உரிய நிவாரணத் தொகையை ஒன்றிய அரசு வழங்கும் என்று நம்பிக்கை கொள்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளத்தில் பதிவு வருமாறு:-

தமிழ்நாடு அடுத்தடுத்து சந்தித்த இருவேறு பேரிடர்களிலிருந்து மீள்வதற்குத் தேவையான நிதியை வழங்க வலியுறுத்தி, நமது அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்துறை அமைச்சர் அமித்ஷாவைச் சந்தித்துக் கோரிக்கை மனு அளித்துள்ளனர்.

ஒன்றியக்குழுக்களும் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ள நிலையில், நமது கருத்துகளை உள்வாங்கி உரிய நிவாரணத் தொகையை ஒன்றிய அரசு வழங்கும் என நம்பிக்கை கொள்வோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## எல்லோருடைய வாழ்க்கையிலும் இன்பம் பொங்கிட

# புதிய ஆண்டு தொழிலாளர்களின் பொற்காலமாக அமையட்டும்!

### விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் புத்தாண்டு வாழ்த்து!



சென்னை, ஜன.15-

தமிழ்ப் புத்தாண்டு - பொங்கல் திருநாளை முன்னிட்டு தொழிலாளர்கள் - விவசாயிகள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு :-

2023 ஆம் ஆண்டு விடை பெற்று, 2024 ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு பிறக்கிறது. தமிழ் ஆண்டு தொடக்கம் தை முதல் நாளேயாகும். தமிழ்ப் புத்தாண்டும் தமிழர் திருநாளாம் பொங்கலும் புது நம்பிக்கையோடு பிறக்கிறது. இந்த நாளில் அனைவருக்கும் நெஞ்சார்ந்த தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

ஒன்றிய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்பட்டால் தான் மக்களின் வாழ்வாதாரம் முன்னேறும், நாடு வளர்ச்சி அடையும். ஆனால் அண்மைக் காலமாக ஒன்றிய ஆரசு; பிற கட்சி ஆட்சி புரியும் மாநில அரசுகளை புறக்கணிப்பது, ஜனநாயகத்தில் மிகப்பெரிய கேடு. மாநில உரிமைகள் பறிப்பு; ஜனநாயக் குரல்வளை நெரிப்பு; மத, மொழி அடிப்படையில் அரசியல்; சி,பி,ஐ, வருமானவரித் துறை, அமலாக்கத்துறை போன்ற அரசு நிறுவனங்களை அரசியல் கட்சிகளை அச்சுறுத்தி பணியவைக்க பயன்படுத்தும் மோசமான அரசியல் போன்ற பல்வேறு இருள் இந்தியாவைச் சூழ்ந்து இருக்கிறது. இந்த வேளையில் 2024 ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டும், பொங்கல் திருநாளும் பிறக்கிறது. மேற்படி இருளை போக்குவதற்கு பொங்கல் பொங்கட்டும், தமிழ்ப் புத்தாண்டு வழி காட்டட்டும்.

தமிழ்நாட்டில் தளபதி மு.க.ஸ்டாகலின் அவர்கள் முதலமைச்சராக பொறுப் பேற்ற பின், நான் கட்டுமானத் தொழிலாளர்கள் வாரியத் தலைவராக நியமனம் செய்யப்பட்டேன். அதன் பின் வாரியத்தின் அனைத்து நலத்திட்ட உதவிகளும் கடந்த பத்தாண்டு அதிமுக ஆட்சி காலத்திற்கு பின் தற்போது இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. ரூபாய் 4 லட்சத்தில் வீடு கட்டும் திட்டம், குணப்படுத்த முடியாத நோயாளிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம், மருத்துவம். ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம் போன்ற கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு முழு செலவையும் வாரியமே ஏற்கும் திட்டம், விபத்தில் இறந்து போகும் ஒரு தொழிலாளியின் உடலை சொந்த ஊருக்கு வாரிய செலவில் கொண்டு சேர்த்தல் போன்ற நான்கு புதிய திட்டங்கள் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

இந்தத் திட்டங்கள் முழுமையாக தொழிலாளர்களுக்குச் சென்று அடைந்திட, இந்தத் திட்டத்தில் உள்ள இடர்பாடுகளைக் களைந்து அனைத்துத் திட்டங்களும் எளிமைப்படுத்தப்பட்டு தொழிலாளர்களுக்கு உடனுக்குடன் பதிவு, புதுப்பித்தல், நலத்திட்ட உதவிகள் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகிறது.

வரும் ஆண்டு தொழிலாளர்களின் பொற்காலமாக அமைந்திடும் என்ற நம்பிக்கையோடு தமிழ் புத்தாண்டையும் பொங்கலையும் வரவேற்போம். எல்லாருடைய வாழ்க்கையிலும் இன்பம் பொங்கிட அனைவருக்கும் தமிழ் புத்தாண்டு பொங்கல் வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

# விருதுநகர் நகர தி.மு.க. சார்பில் தைப் பொங்கல் புத்தாண்டு விழா !

### அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு பங்கேற்பு !

விருதுநகர், ஜன. 15-

விருதுநகர் வடக்கு மாவட்டம் விருதுநகர் நகர தி.மு.க. சார்பில் தமிழ்ப் புத்தாண்டு தைப்பொங்கல் விழா தை 1ம் தேதி அன்று பேரறிஞர் அண்ணா சிலை அருகில் நடைபெற உள்ளது. இந்த விழாவில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு கலந்து கொள்கின்றனர்.

இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஏ ஆர் ஆர் சீனிவாசன் கழக கொடியினை ஏற்றி வைக்கின்றார். நகர மன்ற தலைவர் எஸ் . ஆர் . எஸ் . ஆர் . மாதவன் பொங்கல் வழங்குகின்றார். இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் கே.கே. எஸ். எஸ்.வி.டி.சுப்பாராஜ், வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆவுடையம்மாள், ஒன்றிய பெருந்தலைவர் சுமதி ராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், ஆர்.சுதாகர் தலைமை, ஸ்ரீராம் காசிராஜன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர் கிருஷ்ணகுமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, எஸ்.கோதண்டராமன், மாவட்ட துணைச் செயலாளர் ஏ.ஆர்.சுபேதா, நகர துணைச் செயலார் ஏ.எஸ். கே.ரமேஷ்குமார், வை. மலைராஜன், எஸ்.ஆர்.எஸ். ஆர் மதன்குமார், எம்.கார்த்திகேயன், வக்கீல் எம்.எஸ். அசோக், வி.கே.சங்கர் ராஜ், பெருமாள்சாமி, ஆர். ராஜசெல்வம், கே.சௌந்தர்ராஜன், பொ. முருகன், எஸ் சபரி, ஆர்.பழனிச்சாமி, எஸ் நடராஜன், ஏ.சோசப்ராஜ், பி.ஜெகன் பால் பாண்டியன், ஜி.செல்வேந்திரன், ஏ.அண்ணா துரை, எ.போஸ், என். காஜாமைதீன், முரசொலி கந்தசாமி, எம் . குருசாமி, ஜி.சதீஸ் சுந்தர், எல். திருமாறன், ஸ்ரீ ராமநாதன், பி.ஏ.ஸ்ரீனிவாசகம், பி. மாரியப்பன், எம்.முருகன், ஏ.பி. காமராஜ், டி.ஆர். பி.ராஜரத்தினம், வகிதா ரகுமான், அ.மரியராசு, ஆர். பிர்தௌசி, இப்ராஹிம், கே.எம். குமார் கலந்து கொள்கின்றனர்.

மறைந்த நகரச் செயலாளர் எஸ். ஆர். எஸ். ராஜாக்கனி அவர்களின் நினைவுத்தூணுக்கு மாவட்ட விவ சாய அணி துணை அமைப்பாளர் நேஷனல் ராமர் மாலை அணிவிக்கிறார். நிகழ்ச்சியினை நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன் செய்து வருகின்றார்.

## விடுமுறை அறிவிப்பு!

தை முதல் நாள் தமிழர் திருநாள், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் திருவள்ளுவர் திருநாளையொட்டி 'முரசொலி' அலுவலகத்துக்கு 15.01.2024 - திங்கள் மற்றும் 16.01.2024 - செவ்வாய் ஆகிய இரு நாட்கள் விடுமுறை.

எனவே முரசொலியின் அடுத்த இதழ் 18.01.2024 வியாழன் அன்று வழக்கம்போல் வெளிவரும்.

**- தலைமை நிர்வாகி**

**முரசொலி**



புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை மற்றும் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த பெண்களுக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் 8 கிராம் தங்கம் வழங்கும் விழா டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், நகர்மன்ற துணைத் தலைவர் லியாகத் அலி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மு.க ராமகிருஷ்ணன், தவ.பாஞ்சாலன், சாமிநாதன்,மாவட்ட துணை அமைப்பாளர் சின்னத்துரை,மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் அறிவுடை நம்பி, பால்ராஜ்,காந்திமதி பிரேம் ஆனந்த்,கவி வேந்தன் பழனிவேல், காதர் கனி,லதா ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் 103 பெண்களுக்கு ரூபாய் 50 ஆயிரமும் 8 கிராம் தங்கமும் டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ வழங்கினார்.

# ஆலத்தம்பாடி வெள்ளை நடராஜன் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



திருவாரூர்.ஜன15.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் ஆலத்தம்பாடி ஊராட்சியை சேர்ந்த கழக மூத்த முன்னோடியான எல்லோராலும் "வெள்ளை நடராஜன்" என்று அன்போடு அழைக்கப்படும் நடராஜன் அவர்கள் வயது முதிர்வால் மறைவெய்தினார்.அவருக்கு வயது 74.

மறைந்த வெள்ளை நடராஜனுக்கு ஜெயலட்சுமி என்கிற மனைவியும், மணிவண்ணன் என்கிற மகனும் , கற்பகம், அறிவுக்கண்ணன் என்கிற மகள்களும் உள்ளனர். மறைந்த வெள்ளை நடராஜன் கழகத்தின் மூத்த உறுப்பினராவார். தனது 24வயதில் கழகத்தில் உறுப்பினரான வெள்ளை நடராஜன் தனது இறுதி மூச்சுவரை கழகத்திற்காக பணியாற்றிவர் . கழகம் அறிவிக்கும் அனைத்து நிகழ்வுகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர் ,ஆலத்தம்பாடி கிளை கழக அமைப்பில் பல்வேறு பொறுப்புகளிலும் இருந்து கழக நிர்வாகிகளின் நன்மதிப்பை பெற்றவர் என்பதும் கழகத்தின் சார்பில் வழங்கப்பட்ட பொற்கிழியை பெற்று அங்கீகரிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் மறைவின் தகவலறிந்த கழக நிர்வாகிகள், ஆலத்தம்பாடியில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த வெள்ளை நடராஜனின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## ஜன.25 - மொழிப்போர்த் தியாகிகளுக்கு

# தமிழ்நாடு முழுவதும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

### சென்னையில் முதல்வர் - **கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்**, ஆவடி - பொதுச்செயலாளர் **துரைமுருகன்**, மன்னார்குடி - பொருளாளர் **டி.ஆர்.பாலு**, திருச்சி - முதன்மைச் செயலாளர் **கே.என்.நேரு!**









**இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் - நீங்கள்**
**எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!**
**செந்தமிழுக்குத் தீமைவந்த பின்னும் இந்தத்**
**தேகம் இருந்தொரு லாபமுண்டோ?**
**விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி! - அது**
**வீரத் தமிழ் மக்கள் ஆவி என்போம்!**

**சிங்கமென்ற இளங்காளைகளே - மிகத்**
**தீவிரங் கொள்ளுவீர் நாட்டினிலே!**
**பங்கம் விளைத்திடல் தாய்மொழிக்கே - உடற்**
**பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்!**

**-பாவேந்தர்**

- பெரும் சிறப்புப் பெற்ற நம் தாய் மொழியாம் தமிழ்மொழி, நீராலும் - நெருப்பாலும், வஞ்சகர்களின் வெறுப்பாலும் வெல்லமுடியாத - வீழ்த்த முடியாத செம்மாந்த மொழியாகும்! தத்தமது உரைநடையின் வாயிலாகவும், கவிதைத் தீரமுடனும் தமிழறிஞர்கள்பலர் தங்கள் விழியெனப் போற்றி வளர்த்த வண்டமிழ் மொழியாகும்.

- 1938ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள், தமிழ்நாட்டு மாணவர்கள் இனி இந்தி கட்டாயமாகக் கற்க வேண்டுமென்று அறிவிப்பினை எதிர்த்து, 27.02.1938 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தாய் மொழியைக் காக்க இந்தித் திணிப்பினை எதிர்க்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு அதனடிப்படையில், தந்தை பெரியார், மறைமலை அடிகள், திரு.வி.க., நாவலர் சோமசுந்தர பாரதி, பேரறிஞர் அண்ணா போன்ற தமிழறிஞர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தாய் மொழி காக்க களம் கண்டனர்.

அப்போது, 14 வயதே ஆன பள்ளி மாணவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருவாரூர் வீதியில் தன்னுடன் பயிலும் மாணவர்களை அணி திரட்டி, "கயல், வில், புலி" சின்னம் பொறித்த தமிழ்க் கொடியினை கையிலேந்தி,

**"ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! - நீ**
**தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே!"**

என்று, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர்ப்பரணி பாடி, தமிழ்மொழி காக்கும் போர்வீரராய் முன்வந்தார்.

அன்னைத் தமிழ் காக்க, முதற்கட்ட இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறை சென்ற நடராசன் 15.01.1939 அன்றும்; தாளமுத்து 12.03.1939 அன்றும் வீர மரணம் அடைந்தனர். தமிழக மக்களின் தொடர் போராட்டத்தினால், அரசு 21.02.1940-ல் கட்டாய இந்தித் திணிப்பைக் கைவிடும் முடிவுக்கு வந்தது.

தாராளமாகவும் - ஏராளமாகவும் தமிழ்ச் சொற்கள் இருந்தும், பிறமொழிச் சொற்கள் கலந்து பேசியும், எழுதியும் தமிழுக்கு ஊறு விளைத்திட முனைந்தோர், முடிந்தளவு முயன்றும், 'யாதொன்றும் புரிந்திட இயலாது', என்று முடங்கிடும் நிலையில், என்றென்றும் மாறாத இனிமைத் தமிழுக்கு ஒன்றிய அரசால் ஆபத்து வரவிருந்தபோது,

**"செந்தமிழுக்கு தீங்கொன்று வந்துற்ற பின்னும் - இத்**
**தேகம் இருந்தென்ன லாபம்?"**

என, தனக்குத் தானே கேள்வி எழுப்பிக் கொண்ட அன்னைத் தமிழின் அருந்தவப் புதல்வர்களாம் - கீழுப்பழுவூர் சின்னச்சாமி, விருகம்பாக்கம் அரங்கநாதன், கோடம்பாக்கம் சிவலிங்கம், மாயவரம் சாரங்கபாணி, விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, பீளமேடு தண்டபாணி, சத்தியமங்கலம் முத்து, அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன் தீக்குளித்தும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் ராஜேந்திரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோரின் தீரத்தை நினைவு கூர்ந்திடும் நாள்தான், வருகிற 25.01.2024 மொழிப் போர்த் தியாகிகள் நினைவு தினம் ஆகும்.

உலக வரலாற்றில், நாட்டின் விடுதலைக்காக, இனப் போராட்டத்திற்காக தங்களை மாய்த்துக் கொண்டோர் நிரம்ப உண்டு. ஒரு மொழிக்காக, தங்களது வாழ்க்கையையே சுருக்கிக் கொண்டு - கருகியவர்கள் உண்டு என்றால், அது தமிழ் மக்களையே சாரும்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் வந்த நமது கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், 1972ஆம் ஆண்டு கோவையில், தி.மு.க. மாணவரணியின் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றுகின்ற போது...

"மொழிக்காக - நம்முடைய இனத்திற்காகப் போராடுகிறோம். போராடுகிற நேரத்திலே நம்முடைய உயிரை இழக்கிற தியாகத்தைச் செய்வதற்குக் கூடக் காத்திருக்கிறோம். என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே, அந்த நான்கு ஆண்பிள்ளைகளில் ஒரு ஆண்பிள்ளை போய் விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயமாக கவலைப்பட மாட்டார். அதுவும், 'மொழிக்காக, ஒரு இனத்திற்காக தனயனை இழந்த தந்தை' -என்று என்னுடைய தந்தைக்குப் பாராட்டுக் கிடைக்கும். பாராட்டுகின்ற பெருமையை வாங்கித் தந்த மகிழ்ச்சி எனக்குச்சேரும் அல்லவா?"

-என்று வீர உரையாற்றி, தமிழ் மொழிக்காக தனது இன்னுயிரையும் துறப்பது எனக்குப் பெருமை உடையது என, தனது 18-வது வயதில் சபதமேற்று; இன்றும் தமிழ் மொழிக்கான அனைத்துப் போராட்டங்களிலும் தலைமகனாக விளங்குகிறார்.

'இந்தி பேசாத மக்களின் மீது இந்தியைத் திணித்தே தீருவேன்' என்று ஒன்றியத்தில் ஆட்சி நடத்தும் பாசிச பா.ஜ.க. அரசும், அதன் தலைவர்களும் அனைத்து வழிகளிலும் இந்தியைத் திணிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்நாட்டுக்கு வந்தால், 'தொன்மையான மொழி தமிழ்' என்று நாக்கில் தேன் தடவுவதும், டெல்லிக்குச் சென்றதும் நஞ்சைப் பரப்புவதும் அவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது.

ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்கள் சமீபத்தில் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "இந்திதான் நாட்டு மக்களை ஒன்றிணைக்கிறது - பிராந்திய மொழிகளுக்கு அதிகாரமளிக்கிறது" என்று இந்தித் திணிப்புக் கூச்சலின் மாற்று வடிவமாகப் பேசியதும், எதிர்ப்பின்றி அனைவரும் இந்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என தொடர்ந்து பேசுவதும் மற்ற மொழி பேசும் அனைத்து இன மக்களையும் இந்திக்குக் கொத்தடிமை ஆக்கும் எதேச்சாதிகார முயற்சிக்கு பல்வேறு இடங்களில் இருந்து கண்டனங்கள் வந்தது!

மேலும், ஒன்றிய பொதுத் துறை காப்பீட்டு நிறுவனமான "நியூ இந்தியா இன்சூரன்ஸ்" நிறுவனம், தனது ஊழியர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், "இந்தியை கட்டாயம் படிக்க வேண்டும் - இந்திப் புத்தகங்களை வாங்க வேண்டும் - இந்தி திறனறிய சோதனைகளை நடத்த வேண்டும்" என நீண்டதொரு இந்தித் திணிப்புக் கான பட்டியலை சுற்றறிக்கை என்ற பெயரில் அனுப்பியதும்,

சமீபத்தில் கோவை விமான நிலையத்தில் மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை வீரர் ஒருவர், தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்ணிடம், இந்திதான் தேசிய மொழி, இது கூடத் தெரியாதா? என 'கூகுள்' செய்து பார்க்கச் சொல்லி வற்புறுத்தி மிரட்டிய அவல நிலையும்;

மத்திய பின்னிருப்புக் காவல் படையினருக்கான (சி.ஆர்.பி.எப்.) வேலை வாய்ப்பு அறிவிப்பில், தேர்வுகள் அனைத்தும் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டு, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில், மொழி உரிமையைக் காக்கவும், இந்தி பேசாத மக்களை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் தி.மு.க. இளைஞர் அணியும், மாணவர் அணியும் இணைந்து அறிவித்த கண்டன ஆர்ப்பாட்டத்தைக் கண்ட ஒன்றிய அரசு, 1965 மொழிப்புரட்சிக் காலம் மீண்டும் தமிழ்நாட்டில் உருவாகி விடுமோ என அஞ்சி, இத்தேர்வை இந்தி மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட 13 பிராந்திய மொழிகளில் நடத்திடவும் ஒப்புக் கொண்டது!

எப்பொதெல்லாம் இந்தித் திணிப்பு தலை தூக்குமோ - அப்பொதெல்லாம் கழகத் தலைவரின் ஆணையேற்று, தி.மு.க. மாணவர் அணியின் புலிப் போத்துகள் சீறிப் பாய்ந்திடத் தயங்கியதில்லை.

இந்தியை எப்படியாவது பின்வாசல் வழியாக திணிக்கத் துடிக்கும் ஒன்றிய அரசு ஒன்றை உணர வேண்டும்; இந்தித் திணிப்புக்கு ஆதரவு தெரிவித்து கைக் கட்டி, வாய் பொத்தி அமைதி காக்க தமிழ்நாட்டில் நடப்பது அடிமைகளின் ஆட்சி அல்ல! பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடத்தும் திராவிட மாடல் ஆட்சி!

இந்தியைத் திணிக்க முயன்றோருக்கும், முயல்வோருக்கும் அச்சத்தை உருவாக்கிவிட்டுச் சென்றுள்ள மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திட, பொதுக்கூட்டங்கள் நடத்தி அவர்கள் கொண்டிருந்த தூய தமிழுணர்வுடன் நாமும் வாழ்ந்திட வேண்டும் என்ற சூளுரையை இந்நாளில் மேற்கொண்டிட, கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் பட்டித்தொட்டி முதல் பட்டினக்கரை வரை, தி.மு.க. மாணவர் அணியின் சார்பில், கீழ்க்காணும் உரையாற்றுவோர் பட்டியல் வெளியிடப்படுகிறது.

**தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!**
**தமிழ்நாடு வாழ்க! திராவிட மாடல் ஆட்சி வெல்க!**

**வீரவணக்கம்! வீரவணக்கம்!**
**மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம்!**
**இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**
**ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம்!**
**தமிழை வளர்த்து தமிழரைக் காப்போம்!**

-: தமிழ்நாடு முழுவதும் உரையாற்றுவோர் பட்டியல்:

| | |
|---|---|
| அண்ணாநகர் | கழகத் தலைவர் - |
| | மாண்புமிகு **முதலமைச்சர்** அவர்கள். |
| ஆவடி | மாண்புமிகு. பொதுச் செயலாளர் |
| | **துரைமுருகன்** |
| | எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி., |
| | சா.மு. நாசர், எம்.எல்.ஏ., |
| | சி. ஜெரால்டு |
| மன்னார்குடி | பொருளாளர் |
| | **டி.ஆர். பாலு, எம்.பி.,** |
| | மன்னை த. சோழராஜன் |
| திருச்சி | மாண்புமிகு. முதன்மை செயலாளர் |
| | **கே.என். நேரு** |
| | கரூர் முரளி |
| | அல்லூர் பி.எம். ஆனந்த் |
| ஆண்டிப்பட்டி | மாண்புமிகு. ஐ. பெரியசாமி |
| | நா. இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., |
| | மீனாகண் இரமேஷ் |
| காஞ்சிபுரம் | முனைவர் க. பொன்முடி |
| | க. சுந்தர், எம்.எல்.ஏ., |
| | நா.சே. பிரபாகரன் |
| நாமக்கல் | ஆ. இராசா, எம்.பி., |
| | என். ராஜேஸ்குமார், எம்.பி., |
| | கம்பம் பாண்டிதுரை |
| தென்காசி | கனிமொழி கருணாநிதி, எம்.பி., |
| | என். ஜெயபாலன் |
| | நாகை மு. சாகுல் அமீது |
| மேட்டூர் | அந்தியூர். ப. செல்வராஜ், எம்.பி., |
| | டி.எம். செல்வகணபதி |
| | நெய்வேலி தங்கம் |
| உளுந்தூர்பேட்டை | ஆர்.எஸ். பாரதி |
| | தா. உதயசூரியன், எம்.எல்.ஏ., |
| | கோமல் விஜய் அறிவழகன் |
| காஞ்சிபுரம் | மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்** |
| வடக்கு மாவட்டம் | மாண்புமிகு தா.மோ. அன்பரசன் |
| கடலூர் | சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., |
| | மாண்புமிகு. |
| | எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் |
| | வழக்கறிஞர் |
| | எஸ்.எஸ்.ஆர். சசிக்குமார் |
| கும்மிடிபூண்டி | திருச்சி சிவா, எம்.பி., |
| | டி.ஜெ.எஸ். கோவிந்தராஜன், எம்.எல்.ஏ., |
| | கதிர் மீனாட்சிசுந்தரம் |
| இராணிப்பேட்டை | டி.கே.எஸ். இளங்கோவன் |
| | மாண்புமிகு ஆர். காந்தி |
| | ஆலங்குடி செல்வராஜ் |
| திருச்சி கிழக்கு | மாண்புமிகு. எ.வ. வேலு |
| மாநகரம் | மாண்புமிகு |
| | அன்பில் மகேஷ் பொய்யாமொழி |
| | ஒரத்தநாடு நடராஜன் |
| சேலம் | எஸ்.எஸ். பழனிமாணிக்கம், எம்.பி., |
| | ஆர். இராஜேந்திரன், எம்.எல்.ஏ., |
| | சேலம் இரா. தமிழரசன் |
| | ஆம்பூர் பொய்யாமொழி |
| திருவாரூர் | பொன். முத்துராமலிங்கம் |
| | பூண்டி கலைவாணன், எம்.எல்.ஏ., |
| | அ.வெ. அறவரசன் |
| தருமபுரி | மாண்புமிகு கு. பிச்சாண்டி |
| | தடங்கம் பெ. சுப்பிரமணி |
| | திருச்சி ராதாகிருஷ்ணன் |
| திருமங்கலம் | கடலூர் இள. புகழேந்தி |
| | மு. மணிமாறன் |
| | தீக்கனல் கருணாநிதி |
| சிவகங்கை | சுப. வீரபாண்டியன் |
| | மாண்புமிகு. கே.ஆர். பெரியகருப்பன் |
| | போடி கலைசெல்வன் |
| | பூர்ணசங்கீதா சின்னமுத்து |
| புதுச்சேரி | மாண்புமிகு ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் |
| | ஆர். சிவா, எம்.எல்.ஏ., |
| | லயோலா ராஜசேகர் |

தொடர்ச்சி 7ஆம் பக்கம்

# தமிழ்நாடு முழுவதும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

6-ஆம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| அரியலூர் | மாண்புமிகு முனைவர் கோவி. செழியன் |
| | மாண்புமிகு எஸ்.எஸ். சிவசங்கர் |
| | சென்னை மதிவாணன் |
| வேலூர் | ப. தாயகம் கவி, எம்.எல்.ஏ., |
| | ஏ.பி. நந்தகுமார், எம்.எல்.ஏ., |
| | சிறுவனூர் பரசுராமன் |
| சங்கரன்கோயில் | எஸ். ஆஸ்டின் |
| | ஈ. ராஜா, எம்.எல்.ஏ., |
| | குளித்தலை சலாவுதீன் |
| திண்டிவனம் | பூச்சி எஸ். முருகன் |
| | மாண்புமிகு. கே.எஸ். மஸ்தான் |
| | சென்னை உதயசூரியன் |
| பொன்னேரி | தஞ்சை கூத்தரசன் |
| | முனைவர். நா. சந்திரபாபு |
| | க. எழிலன் |
| அருப்புக்கோட்டை | க. வேங்கடபதி |
| | மாண்புமிகு |
| | கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமசந்திரன் |
| | வழக்கறிஞர் அ. கணேசன் |
| ஈரோடு | குத்தாலம் பி. கல்யாணம் |
| | மாண்புமிகு. சு. முத்துசாமி |
| | தூத்துக்குடி தமிழ்ப்பிரியன் |
| | ஜெ. வீரமணி |
| கள்ளக்குறிச்சி | தி.அ. முகமது சகி |
| | வசந்தம் கார்த்திகேயன், எம்.எல்.ஏ., |
| | இளந்தளிர் இளங்கோ |
| மதுரை | கம்பம் செல்வேந்திரன் |
| | கோ. தளபதி, எம்.எல்.ஏ., |
| | சேலம் ஜான்பாட்ஷா |
| | அதலை பி. செந்தில்குமார் |
| காரைக்குடி | பொள்ளாச்சி மா. உமாபதி |
| | ஆத்தூர் வெங்கடேசன் |
| திருப்பூர் | வழக்கறிஞர் இரா. கிரிராஜன், எம்.பி., |
| | க. செல்வராஜ், எம்.எல்.ஏ., |
| | கோவை. அ. திராவிடமணி |
| திருவள்ளூர் | திண்டுக்கல் ஐ. லியோனி |
| | திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ., |
| | புலவர் சாமிநாகப்பன் |
| திருப்பத்தூர் (வேலூர்) | முனைவர் சபாபதி மோகன் |
| | உடுமலை தண்டபாணி |
| இராமநாதபுரம் | கவிச்சுடர் கவிதை பித்தன் |
| | காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., |
| | ஆக்காட்டி ஆறுமுகம் |
| விழுப்புரம் | வாகை சந்திரசேகர் |
| | நா. புகழேந்தி, எம்.எல்.ஏ., |
| | அன்னவயல் கணேசன் |
| கோயம்புத்தூர் | மாண்புமிகு முனைவர் |
| | பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் |
| | நா. கார்த்திக் |
| | தா. ஆதித்தன் |
| | வி.ஜி. கோகுல் |
| விருதுநகர் | முனைவர் தமிழச்சி |
| | தங்கபாண்டியன், எம்.பி., |
| | மாண்புமிகு தங்கம் தென்னரசு |
| | மதுரை சாதுராஜன் |
| மயிலாடுதுறை | புதுக்கோட்டை விஜயா |
| | நிவேதா முருகன், எம்.எல்.ஏ., |
| | சித்திரைகுடி பாலகிருஷ்ணன் |
| இராசிபுரம் | நாஞ்சில் சம்பத் |
| | ஆவடி அமுதநேசன் |
| வந்தவாசி | மருத்துவர். நா. எழிலன், எம்.எல்.ஏ., |
| | ரஷித்கான் |
| புதுக்கோட்டை | பேராசிரியர் |
| | கான்ஸ்டன்டைன் இரவீந்திரன் |
| | மாண்புமிகு. எஸ். இரகுபதி |
| | மருத்துவர் கலை. கதிரவன் |
| கரூர் | வி.பி. ராஜன் |
| | செந்தாமரை கண்ணன் |
| மதுராந்தகம் | அன்னியூர் சிவா |
| | மங்கலம் பிரபாகரன் |

| | |
|---|---|
| கோபிசெட்டிபாளையம் | டி.எம். கதிர் ஆனந்த், எம்.பி., |
| | என். நல்லசிவம் |
| | பாலக்கரை டி. கோவிந்தன் |
| செய்யாறு | நெல்லிகுப்பம் புகழேந்தி |
| | திருச்சி சேகர் |
| பெரம்பலூர் | குத்தாலம் க. அன்பழகன் |
| | குன்னம் இராஜேந்திரன் |
| | கு. மொழிமாறன் |
| உடுமலைப்பேட்டை | எம்.எம். அப்துல்லா, எம்.பி., |
| | முரசொலி மூர்த்தி |
| திருவண்ணாமலை | கவிஞர் ஈரோடு இறைவன் |
| | மயிலாடுதுறை அருள்தாஸ் |
| நெல்லை | ஏ.கே.எஸ். விஜயன் |
| | டி.பி.எம். மைதீன்கான் |
| | தரமணி ஜெகதீசன் |
| திண்டுக்கல் | தமிழன் பிரசன்னா |
| | ஐ.பி. செந்தில்குமார், எம்.எல்.ஏ., |
| | செந்தூர் பாலகிருஷ்ணன் |
| ஆரணி | வழக்கறிஞர் இ. பரந்தாமன், எம்.எல்.ஏ., |
| | எம்.எஸ். தரணிவேந்தன் |
| | தி.நகர் ச. சண்முகநாதன் |
| விருத்தாசலம் | சூர்யா வெற்றிக்கொண்டான் |
| | மாண்புமிகு. சி.வி. கணேசன் |
| | டாக்டர் அபிபுல்லா |
| சிவகாசி | வழக்கறிஞர் அ. சரவணன் |
| | தமிழ் சாதிக் |
| துறையூர் | கவிஞர் காசிமுத்து மாணிக்கம் |
| | சன்.கோ. ஆறுமுகம் |
| இடங்கணசாலை | வி.பி. கலைராஜன் |
| | ஈரோடு சத்தியாவதி |
| ஒட்டன்சத்திரம் | எஸ்.கே.பி. கருணாநிதி |
| | மாண்புமிகு அர. சக்கரபாணி |
| | ஆம்பூர் தருமன் |
| | கா. பொன்ராஜ் |
| கோவில்பட்டி | இரா. ராஜீவ்காந்தி |
| | மாண்புமிகு கீதா ஜீவன் |
| | முஜ்பூர் ரகுமான் |
| குளித்தலை | ச. தங்கவேல் |
| | பா.கோ. குமார் |
| திருமயம் | கவிஞர் தமிழ்தாசன் |
| | தமிழ்கொண்டான் |
| வேதாரண்யம் | பி.டி. அரசகுமார் |
| | ஏர்போர்ட் பொன்னுசாமி |
| தாராபுரம் | டாக்டர் விஜய் |
| | செங்கல்பட்டு சீனுவாசன் |
| தஞ்சாவூர் | கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி |
| | எஸ். துரைசந்திரசேகர், எம்.எல்.ஏ., |
| | கு. வாஞ்சிநாதன் |
| பாலக்கோடு | பெருநற்கிள்ளி |
| | பி. பழனியப்பன் |
| | தமிழன்பன் |
| செஞ்சி | சித்திரமுகி சத்தியவாணிமுத்து |
| | உடுமலை தாரை சிவா |
| காங்கேயம் | வி.சி. சந்திரகுமார் |
| | இல. பத்மநாபன் |
| | குமரி பிரபாகரன் |
| நாகர்கோயில் | நந்தனம் நம்பிராஜன் |
| | மேயர் ஆர். மகேஷ் |
| | நெல்லை மணி |
| கிருஷ்ணராயபுரம் | அர. திராவிடம் |
| | கோட்டூர் முருகன் |
| பெருந்துறை | செந்தலை கவுதமன் |
| | ஆற்காடு அகிலன் |
| காரைக்கால் | கோவி. லெனின் |
| | எச். நாஜீம் |
| | பாரதி மோகன் |
| சோளிங்கர் | விஜயா தாயன்பன் |
| | ஆத்தூர் சபரி |
| தொண்டாமுத்தூர் | டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு |
| | என். இரவி |
| | கோபி. குமணன் |
| ஊட்டி | தமிழ் கா. அமுதரசன் |
| | பா.மு. முபாரக் |

| | |
|---|---|
| | காவேரிப்பட்டினம் இளையராஜா |
| போடி | சைதை சாதிக் |
| | துறையூர் பாஸ்கரன் |
| கிருஷ்ணகிரி | முனைவர் பொன்னேரி சிவா |
| | தே. மதியழகன், எம்.எல்.ஏ., |
| | விஷார் க. தமிழரசன் |
| மானாமதுரை | கவிஞர் சல்மா |
| | வழக்கறிஞர் மணிமுடி |
| கீழ்பென்னாத்தூர் | சென்னை அரங்கநாதன் |
| | கலைச்செல்வி ஜெகநாதன் |
| திருத்துறைப்பூண்டி | சோம. செந்தமிழ்செல்வன் |
| | கொரஞ்சூர் முனுசாமி |
| பர்கூர் | போடி. காமராஜ் |
| | வெ. அன்புவாணன் |
| பவானி | அத்திப்பட்டு சாம்ராஜ் |
| | பவித்திரம் கண்ணன் |
| மேட்டுப்பாளையம் | வேலூர் கென்னடி |
| | தருமபுரி அதியமான் |
| அறந்தாங்கி | ஆரூர் மணிவண்ணன் |
| | வண்ணை புகாரி |
| சிதம்பரம் | ஆடுதுறை உத்திராபதி |
| | கா.வி. நெடுஞ்செழியன் |
| திருப்போரூர் | மனுஷ்யபுத்திரன் |
| | திருவெற்றியூர் கருணாநிதி |
| மேலூர் | தூத்துக்குடி சரத்பாலா |
| | மாண்புமிகு. பி. மூர்த்தி |
| | ஈரோடு இளையகோபால் |
| இராஜபாளையம் | ஆவடி பாஸ்கர் |
| | எம்.எல். நாதன் |
| கம்பம் | வேலூர் இரமேஷ் |
| | தாம்பரம் ஜின்னா |
| சீர்காழி | மன்னை சோம. இளங்கோவன் |
| | கரூர் மதி |
| திருச்செங்கோடு | திருப்பூர் மனோகர்பாபு |
| | குன்னூர் கலீம் |
| கலசப்பாக்கம் | நாத்திகம் நாகராஜன் |
| | எழும்பூர் கோபி |
| விராலிமலை | ஆலந்தூர் ஒப்பிலாமணி |
| | வஹிதா பேகம் |
| தேனி | வரகூர் காமராஜ் |
| | தங்க தமிழ்செல்வன் |
| | கனல் சுப்பிரமணி |
| பல்லடம் | ஜோன்ஸ் ரூசோ |
| | போர்முரசு கதிரவன் |
| பொள்ளாச்சி | வயலூர் கிருஷ்ணமூர்த்தி |
| | தளபதி முருகேசன் |
| | குடந்தை ராமகிருஷ்ணன் |
| குன்னூர் | கவிஞர் சிவமுத்துவளவன் |
| | வா.சு. முத்துசாமி |
| பேராவூரணி | திருப்பூர் ரஜினி செந்தில் |
| | தீக்கனல் தியாகு |
| ஜெயங்கொண்டம் | சிங்கை பிரபாகரன் |
| | மதுரை சேவியர் |
| பட்டுக்கோட்டை | வே. மதிமாறன் |
| | க. அண்ணாதுரை, எம்.எல்.ஏ., |
| | வீர. வெள்ளைச்சாமி |
| நிலக்கோட்டை | ஆலந்தூர் மலர்மன்னன் |
| | கடையநல்லூர் இஸ்மாயில் |
| விக்கிரவாண்டி | கோவை சம்பத் |
| | புலவர் பெரியாழ்வார் |
| பெரியகுளம் | ஜஸ்டீன் வில்பர்ட் |
| | கோவை இக்பால் |
| திருச்சுழி | உடன்குடி தனபால் |
| | செங்குன்றம் திராவிடமணி |
| மொடக்குறிச்சி | கோதை மதிவாணன் |
| | போலீஸ் ஆல்பிரட்தாஸ் |
| நெய்வேலி | உ. மதிவாணன் |
| | எஸ்.கே. ஸ்ரீராம் |
| சின்னசேலம் | பிரம்மபுரம் பழனி |
| | ஆவடி கா.மு. ஜான் |

| | |
|---|---|
| நன்னிலம் | தஞ்சை காமராஜ் |
| | வேங்கை சந்திரசேகர் |
| செங்கம் | பவானி கண்ணன் |
| | செங்கை சந்தானம் |
| சேந்தமங்கலம் | திப்பம்பட்டி ஆறுச்சாமி |
| | எம்.பி. ஆலன் |
| வாணியம்பாடி | சேப்பாக்கம் பிரபாகரன் |
| | குன்னூர் ஜாகீர் உசேன் |
| குடியாத்தம் | வழக்கறிஞர். சிவ. ஜெயராஜ் |
| | கோவை சௌந்தர் |
| திட்டக்குடி | தஞ்சை கலைமணிபாரதி |
| | போர்னாம்பட்டு இராஜேந்திர பிரசாத் |
| ஓமலூர் | பசும்பொன் இரவிசந்திரன் |
| | கே.இ. செந்தமிழ் அரசு |
| கும்பகோணம் | சேலம் சுஜாதா |
| | சு. கல்யாணசுந்தரம், எம்.பி., |
| | நாமக்கல் இராஜகோபால் |
| வேடசந்தூர் | மதுரை ஜவகர் |
| | புத்தூர் ஆனந்தன் |
| பூம்புகார் | நளினி சாரங்கன் |
| | எசனை ஆறுமுகம் |
| அரூர் | ஆரணி மாலா |
| | கவிஞர் வீரமுரசு |
| குமாரபாளையம் | பொள்ளாச்சி சித்திக் |
| | எழும்பூர் தேவநிதி |
| பாப்பிரெட்டிபட்டி | ஓசூர் அப்துல் ரஹ்மான் பாரி |
| | கோவை சேரலாதன் |
| திருப்பத்தூர் (சிவகங்கை) | தக்கோலம் தேவபாலன் |
| | வண்ணை மோகன் |
| அரவக்குறிச்சி | திருப்பூர் கூத்தரசன் |
| | ரம்ஜான் பேகம் |
| ஓசூர் | குடியாத்தம் பெரிய கோட்டீஸ்வரன் |
| | ஓய். பிரகாஷ், எம்.எல்.ஏ., |
| | மதுரை குருசாமி |
| பரமக்குடி | இடிமுரசு மணிமுத்து |
| | நெல்லை மூர்த்தி |
| கமுதி | வழக்கறிஞர் முத்து முத்தையா |
| | நன்னிலம் சந்திரசேகர் |
| ரிஷிவந்தியம் | நெல்லை ரவி |
| | குடியாத்தம் அன்பு |
| ஆலங்குடி | குடியாத்தம் பாரி |
| | கே.வி. ராமகிருஷ்ணன் |
| போளூர் | செங்கை தாமஸ் |
| | காரை கு. அருளானந்தம் |
| வாழப்பாடி | மதுரை அலெக்சாண்டர் |
| | எஸ்.ஆர். சிவலிங்கம் |
| | துறையூர் துரைப்பாண்டி |
| பண்ருட்டி | நாகம்மை கருப்பையா |
| | முகவை ராமர் |
| ஆம்பூர் | கவிஞர் நன்மாறன் |
| | ஈகை தனசேகரன் |
| ஊத்தங்கரை | சேலம் கோவிந்தன் |
| | சைதை பாஸ்கர் |
| நத்தம் | அதிரடி அல்தாப் |
| | பெரம்பலூர் விஜயரத்தினம் |
| மார்த்தாண்டம் | நெல்லை முத்தையா |
| | மாண்புமிகு மனோ. தங்கராஜ் |
| | சிவகாசி ஜீவா |
| அம்பாசமுத்திரம் | கம்பம் பாண்டியன் |
| | இரா. ஆவுடையப்பன் |
| | சி.பி. சிங்காரவேல் |
| சாத்தான்குளம் | வண்ணை அரங்கநாதன் |
| | மாண்புமிகு அனிதா ராதாகிருஷ்ணன் |
| | முருக்கம் முனுசாமி |
| சாத்தூர் | மார்ஷல் முருகன் |
| | தா. பழூர் இளஞ்செழியன் |
| வேப்பனஹள்ளி | பூங்கா நகர் ஜெ. கண்ணன் |
| | தீக்கனல் செல்வம் |
| சூலூர் | மதுரை சுந்தரராஜன் |
| | ஆசிரியர் அன்புமணி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18
நாள் – 13.01.2024

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி




புதுக்கோட்டைவடக்கு மாவட்டம் குன்றாண்டார் கோவில் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றியங்கள், கீரனூர் பேரூர் கழகம் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பழைய சந்தைப்பேட்டை கீரனூரில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், என்.சேட்டு, ஓ.எஸ். வெங்கடாசலம், சி. சண்முகம், கீரனூர் பேரூர் கழகச் செயலாளர் பி.அண்ணாதுரை ஆகியோர் வரவேற்புரையிலும் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர்ஒன்றிய பெருந்தலைவர் கே.ஆர்.என்.போஸ், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் செ.அசோக்பாண்டியன், மாவட்ட பொருளாளர் எம்.லியாக்கத் அலி, பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் த.செல்வம், பேரூராட்சி தலைவர் கே.எம்.கே.ரவிக்குமார், துணைத் தலைவர் எம்.ஏ.எம்.இம்தியாஸ், இராம.செல்வராஜ், கீரை.அஸ்ரப் அலி, ஆ.ராஜேந்திரசோழன், முனைவர் செ.குறிஞ்சிவானன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், கவிஞர் மரிய எட்வின், வழக்கறிஞர் மணிகண்டன், வழக்கறிஞர் ராஜேஷ், சொ.தமிழினியன், எழில் ராஜா,கே.ஆர்.பாலமுத்து, க.வீரையா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டாரம், கீழாத்தூர் கிராமத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில், நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.39.46 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள, விதை சேமிப்புக் கிடங்குடன் கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையத்தினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 11.01.2024 அன்று திறந்து வைத்து, வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை வழங்கினார். உடன் இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, ஒன்றியக் குழுத் தலைவர்கள் திருமதி.வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்துறை) செல்வம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## கழக இளைஞர் அணி மாநாட்டில் பெருந்திரளாக பங்கேற்போம்!

### பூண்டி.கே.கலைவாணன் பங்கேற்ற மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

திருவாரூர், ஜன.15-

திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் தீர்மானனக்ளை விளக்கி பேசினார். மாவட்ட ஊராட்சி பெருந்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், பொருளாளர் மு. வெங்கடேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர்.எஸ்.பாண்டியன், கோ.செல்வம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், தமிழ்நாடு முதலவர், திராவிட நாயகர், கழக தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும், இளைஞர்களின் எழுச்சி நாயகர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், இளைஞரணி செயலாளர் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெறும் மாநில இளைஞர் அணி இரண்டாவது மாநாட்டில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூரில் இருந்து பெருந்திரளான இளைஞர்கள் வெண்ணிற சீருடையுடன் கலந்து கொண்டு இந்த மாநாட்டை வரலாற்றில் இடம்பிடிக்கும் வகையில்செய்வது,

தமிழர்களின் திருநாளாம் தைத்திங்கள் முதல் நாளை புத்தாண்டை கொண்டாடி, பொங்கல் திருநாளில் ஒன்றிய நகர பேரூர் மற்றும் வார்டு கிளை கழகங்களில் கழக கொடி ஏற்றி , பொதுமக்களுக்கு இனிப்புக்கள் வழங்குவது, தலைமை கழகத்தால் வழங்கப் பட்டிருக்கும் உறுப்பினர் அடையாள அட்டைகளை பொங்கல் திருநாட்களுக்குள் வழங்கி பொங்கல் வாழ்த்துக்களை தெரிவிப்பது, தலைமை கழகத்தால் அறிவுருத்தப்பட்டிருக்கும் பத்து வாக்குச்சாவடிக்கு ஒரு மேற்பார்வையாளரை உடனடியாக நியமிப்பது, கொடுக்கப்பட்டிருக்கும் தலைமைக் கழக படிவங்களை பூர்த்தி செய்து மாவட்டக் கழகத்தில் ஒப்படைப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, இராதாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாய விலைக் கடையில் பொங்கல் பரிசாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு மற்றும் ரூ.1,000/– ரொக்கம், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. வழங்கினார். ஒன்றிய குழு தலைவர் சங்கிதாஅரசி ரவிதுரை, மாவட்ட துணை பதிவாளர் நாராயணசாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் சந்திரசேகரன், ஒன்றிய செயலாளர்கள் ஜெய. ரவிதுரை, ஜெ.ஜெயபால், வட்ட வழங்கல் அலுவலர் விமல், ஆர்.ஐ.தயாநிதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுமதி, முபாரக் அலி, மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர்கள் செந்தில்குமார், மகேஸ்வரி பாஸ்கர், கஸ்தூரி பாண்டியன், மாவட்ட கண்காணிப்பு குழு எத்திராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### மயிலம் – வெங்கந்தூர் ஊராட்சியில்

## பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

மயிலம், ஜன.15-

தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பாகப் பச்சரிசி 1 கிலோ, சர்க்கரை 1 கிலோ, முழு கரும்புடன் ரூபாய் 1000 ரொக்கமாக வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க . ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். இந்தப் பொங்கல் பரிசு தொகுப்பு நேற்று முதல் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மயிலம் ஒன்றியம் வெங்கந்தூர் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமையில்

கூட்டுறவு மண்டல இணை பதிவாளர் யசோதரா தேவி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை செய்து வருகிறார்.அந்த வகையில் பொங்கல் திருநாளை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் கொண்டாடும் வகையில் தாய் உள்ளத்தோடு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்க உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 6 லட்சத்து 14 ஆயிரத்து 113குடும்ப அட்டைதாரர்களுக்கு 61.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொங்கல் பரிசு தொகுப்புவழங்கப் பட்டுள்ளதள்ளது.

இவ்வாறு அமைச்சர் செஞ்சி மஸ்தான்தெரிவித்தார்.

முன்னதாக பேசிய மயிலம் தொகுதி பா.ம.க சட்ட மன்ற உறுப்பினர் சிவகுமார் பேசுகையில் மகளிர்களுக்கு கலைஞர் உரிமை தொகையை வழங்கியும்

கடுமையான பொருளாதார நெருக்கடி நேரத்தில் கூட பொங்கல் பண்டிகை முன்னிட்டு தமிழ்நாட்டில் உள்ள 2 கோடிக்கும் மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு உங்கள் தொகுப்புடன் ஆயிரம் ரூபாய் வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், செழியன், விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு மேலாண் இயக்குனர் இளஞ் செல்வி,ஒன்றிய கவுன்சிலர்கள்'பரிதா சம்சுதீன், கோமதி பச்சை முத்து, செல்வகுமார், கீதா சிவக்குமார், அரசு முருகன், ராஜ் பரத், கண்ணன், நிவேதிதா, ஊராட்சி மன்ற தலைவர்கள் வசந்தா விநாயகம், குமுதா ரமேஷ்,ரமேஷ், நிர்வாகிகள் இ. சேகர், சண்முகம், தீவனூர் சேகர், ஞானசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### ஆட்சியர் மருத்துவர் ச.உமா தலைமை! தி.வேல்முருகன் எம்.எல்.ஏ. முன்னிலை!

## 'கேலோ இந்தியா 2023' விழிப்புணர்வு மாரத்தான் போட்டி!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தொடங்கி வைத்தார்!

நாமக்கல், ஜன. 15-

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் நாட்டிலுள்ள இளைஞர்களிடையே விளையாட்டு கலாச்சாரத்தை வளர்பதற்கும் விளையாட்டில் சிறந்து விளங்குவதற்கும் ஒன்றிய அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற ஒருங்கிணைந்த விளையாட்டு நிகழ்வாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் அடிப்படையில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடத்துவதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்பட்டு 2023ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளை தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் வரும் 19.01.2024 முதல் 31.012024 வரை நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளின் செய்தியையும், உணர்வையும் பரப்பிட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் விளம்பரம் மற்றும் கேண்டர் (டார்ச்) (Canter) சுற்றுப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கேண்டர் நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்தது. இதனையொட்டி நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா கேலோ இந்தியா 2023 விழிப்புணர்வு மினி மாரத்தான் போட்டி மற்றும் விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த அலங்கார ஊர்தியானது மாவட்ட விளையாட்டு அரங்கம், சி.எம்.எஸ் கல்லூரி, திருச்செங்கோடு கே.எஸ்.ஆர் கல்லூரி, அக்ஷரா அகாடமி, நாமக்கல் வேலம்மாள் பள்ளி ஆகிய இடங்களில் மாணவ - மாணவிகள் பார்வையிடும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டது.


தொடர்ந்து, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அரசு உறுதிமொழி குழுத் தலைவர்/பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் தி.வேல் முருகன் தலைமையில், குழு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.அருள் (சேலம் மேற்கு), மொ.பழனியாண்டி (ஸ்ரீரங்கம்), சட்டமன்ற உறுப்பினர்கள் கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), பெ.ராமலிங்கம் (நாமக்கல்), ஈ.ஆர்.ஈஸ்வரன் (திருச்செங்கோடு) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கேலோ இந்தியா 2023 போட்டிகளை முன்னிட்டு நடைபெற்ற மினி மாரத்தான், திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, கட்டுரை போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 18 நபர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் மாவட்ட சுகாதார பேரவை கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேசினார். உடன் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி. மகாபாரதி, சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவரும், நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர் ப.முருகமணி மற்றும் பலர் உள்ளனர்.


ராணி மலர்மன்னன் ◉ அனிதா மலர்மன்னன் ◉ ஷெரில் பிரியா சித்தார்த்தன்
சித்தார்த்தன் சந்திரசேகரன் ◉ நிவின் மித்தரன்

## எல்லோருடைய கடுமையான உழைப்புதான்

# கொரோனாவை வெற்றி கொள்ள காரணமாக இருந்தது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் எழுதிய ‘கொரோனா உடல் காத்தோம், உயிர் காத்தோம்’ நூலை வெளியிட்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, ஜன.15– எல்லோருடைய கடுமையான உழைப்புதான் கொரோனாவை வெற்றி கொள்ளக் காரணமாக இருந்தது என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் எழுதிய ‘கொரோனா உடல் காத்தோம், உயிர் காத்தோம்’ நூலை வெளியிட்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றியபோது குறிப்பிட்டார்.**

சென்னை, நந்தனம் ஒய் எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெறும் 47வது புத்தகக் காட்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் எழுதிய ‘கொரோனா உடல் காத்தோம், உயிர் காத்தோம்’ நூலின் தமிழ் மற்றும் ஆங்கிலப் பதிப்பின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நூல்களை வெளியிட்டு வாழ்த்திப் பேசினார்.

அப்போது அவர் ஆற்றிய உரை வருமாறு:

“எனக்கு ஒரு சின்ன வருத்தம் இருக்கிறது. என்னை ஒவ்வொருவரும் பேசும் போதும் அழைக்கும் போதும் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சார்பாக சட்டமன்ற உறுப்பினர், இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் என்றெல்லாம் அழைத்தீர்கள். ஆனாலும் ஒரு முக்கியமான விஷயத்தை விட்டுவிட்டீர்கள். நானும் ஒரு பதிப்பாளர். யாருமே அதைப் பத்தி பேசவே இல்லை. இந்தப் புத்தகக் காட்சியைத் திறந்து வைத்ததும் நான்தான்.

### பதிப்பாளர் என்பதால் மகிழ்ச்சி அடைகிறேன்!

சென்ற வாரம், இந்தச் சிறப்புக்குரிய சென்னை புத்தகக் காட்சியைத் துவக்கி வைத்தேன். இளைஞர் அணி சார்பாக, கலைஞரின் பெயரில் `முத்தமிழறிஞர் பதிப்பகம்’ எனும் பதிப்பகத்தைத் தொடங்கி, ஒன்பது புத்தகங்களை இந்த ஆண்டு வெளியிட்டேன். (பலத்த கைத்தட்டல்) கைதட்டினால் மட்டும் போதாது. புத்தகக் காட்சிக்குச் செல்லுங்கள். முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் கடை எண் 315 பி. சென்று புத்தகம் வாங்குறீர்களோ, இல்லையோ அங்கே சென்று பார்த்து விட்டாவது போங்கள். எனவே ஒரு பதிப்பாளர் என்ற வகையில் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ளேன் என்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

உலகத்தின் பல்வேறு மூலைகளில் இருந்து இந்தப் புத்தகக் கண்காட்சியை ரசித்துப் பல புத்தகங்களை வாங்கிச் செல்கின்றார்கள். அப்படியான புத்தகக்காட்சியில் இந்தப் புத்தகத்தை வெளியிடுவதில், பெருமை அடைகின்றேன். இதற்கு முன்பு அண்ணன் மா.சு அவர்கள் எழுதிய `ஓடலாம் வாங்க’ என்ற புத்தகத்தைக் கடந்த 2021 ஆம் ஆண்டு வெளியிட்டேன். இதே இடத்தில் இதே மேடையில் வெளியிட்டேன்.

சென்ற ஆண்டு அந்தப் புத்தகத்தின் ஆங்கிலப் பதிப்பு `கம் வித் ரன்’ என்ற பெயரில் இங்கு வெளியிடப்பட்டது. இந்த வருடம் அண்ணன் இன்னொரு புத்தகத்தோடு வந்திருக்கிறார். கலைஞர் அவர்கள் எப்பொழுதுமே ஒரு விஷயத்தைச் சொல்வார்கள். `வருமுன் காப்போம்’ என்பதுதான் அது. இந்திய மருத்துவத்துறை வரலாற்றில் கலைஞர் அவர்களின் `வருமுன் காப்போம் திட்டம்’ மிகப்பெரிய ஒரு வழிகாட்டித் திட்டமாக இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கலைஞர் அவர்களின் சொல்லுக்கு ஏற்ப நோய் வருமுன் காக்கும் விதமாக செயல்பட்டு வருவது தான் நம் திராவிட மாடல் அரசு. நம்முடைய அமைச்சர் அண்ணன் மா.சு அவர்கள் காலையில் 5:00 மணிக்கு எழுந்து எங்கேயாவது மாரத்தான் ஓடிக் கொண்டிருப்பார். மாலையில் நடைப் பயிற்சி செய்து கொண்டிருப்பார். அதன் பிறகு கட்சிப் பணிகள். இரவு பார்த்தீர்கள் என்றால், ஏதாவது ஒரு மாவட்டத்திற்குச் சென்று மருத்துவமனையில் ஆய்வு செய்து கொண்டிருப்பார். இவை எல்லாவற்றை விடவும் பெரிய விஷயம் என்னவென்றால், காலையில் அவர் மாரத்தான் ஓடும் பொழுதுகூட அரசு அதிகாரிகளையும் கூட்டிக்கொண்டு ஓடிக் கொண்டிருப்பார்.

இப்போது அரசு அதிகாரிகள் எல்லாம் வேலை பார்க்கவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. அவர் இப்படிச் செயல்படுவது மட்டுமின்றி மற்றவர்களையும் இந்த உடல்நலம் சார்ந்த விஷயங்களில் பங்கேற்கச் செய்து வருகின்றார். மாரத்தானில் நானும் நம்முடைய விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் அண்ணன் தயாநிதி மாறன் அவர்களும் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள். காலையில் ஐந்து மணிக்கு வந்து விடுங்கள் என்பார்.

### மாரத்தான் போட்டியை சிறப்பாக நடத்துபவர் மா.சு.!

அதனால் மா.சு அண்ணன் நிகழ்ச்சி என்றாலே, என்ன நிகழ்ச்சி எத்தனை மணிக்கு என்று முதலில் விசாரித்துக் கொண்டுதான் போவோம். கலைஞரின் நினைவு நாளை முன்னிட்டு, கொரானா காலத்தில் விர்ச்சுவல் மாரத்தான் போட்டிகளை மிகச் சிறப்பாக நடத்திக் காட்டினார்.

சமீபத்தில் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு அவர் ஒரு மாபெரும் கின்னஸ் மாரத்தான் போட்டியை நடத்திக் காட்டினார். அந்த நிகழ்ச்சியையும் நான்தான் தொடங்கி வைத்தேன். அதன் முன்னெடுப்பில் அரசு சார்பில் தொடங்கப்பட்ட ` நடப்போம் நலம் பெறுவோம்’ என்ற திட்டத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதும் நடைபாதைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதைத் தாண்டி கட்சி வேலையையும் பார்க்கிறார். அமைச்சராக இருந்து நிர்வாகப் பணிகளையும் சிறப்பாகச் செய்து வருகின்றார். இவ்வளவு வேலைகளுக்கு நடுவில் எப்படி அவருக்குப் புத்தகம் எழுத நேரம் கிடைத்தது என்பது தான் மிகப்பெரிய ஒரு வியப்பு.

அவருக்கு எப்படி நேரம் கிடைக்கிறது என்பது இதுவரை யாருக்கும் தெரியவில்லை.

கொரோனா உடல் காத்தோம் உயிர் காத்தோம் வெறும் புத்தகம் மட்டுமல்ல. அது ஒரு ஆவணம் என்றுதான் சொல்ல வேண்டும். முக்கியமாகப் ‘பாண்டமிக் மேனேஜ்மென்ட் கைடு’ என்று சொன்னால் மிகப் பொருத்தமாக இருக்கும். நம்முடைய திராவிட மாடல் அரசு கொரோனாவை எப்படிக் கட்டுக்குள் கொண்டு வந்தது என்பதை மிகத் தெளிவாக விவரமாக அண்ணன் அவர்கள் இந்தப் புத்தகத்தில் எழுதி இருக்கின்றார்.

இந்தப் புத்தகத்திற்கு அண்ணன் கொடுத்திருக்கின்ற அந்தத் தலைப்பே மிகப் பாராட்டுக்குரியது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொல்வார். நான் என்று சொல்லும் பொழுது உதடுகள் ஒட்டாது. நாம் என்று சொன்னால்தான் உதடுகள் கூட ஒட்டும் என்று சொல்வார்கள். அந்த வகையில்தான் இந்தப் புத்தகத்திற்குப் பெயர் `கொரோனா உடல் காத்தோம் உயிர் காத்தோம்’ என்று பெயர் வைத்துள்ளார்கள்.

அதாவது கொரோனாவை வென்ற அந்தக் கிரெடிட் அவர் மட்டும் எடுத்துக் கொள்ளாமல் அதற்காக உழைத்த அத்தனை பேருக்கும் அந்தத் தலைப்பின் மூலம் கொடுத்திருக்கிறார். அதற்கு நாம் அனைவரும் பாராட்டியே ஆக வேண்டும்.

நம்முடைய கழகம் ஆட்சிக்கு வந்த சமயத்தில் கொரோனா இரண்டாவது அலை மிக உச்சத்தில் இருந்தது. மருத்துவமனையில் படுக்கை போதுமானதாக இல்லை,



போதுமான ஆக்சிஜன் வசதி இல்லை. அந்த நிலைமையைச் சமாளிக்கக் கூடுதல் சுகாதாரப் பணியாளர்கள் தேவைப்பட்டார்கள். அந்த சமயத்தில்தான் நம்முடைய கழக அரசு பொறுப்பேற்றது. நம்முடைய அரசு மேற்கொண்ட பணியின் காரணத்தால் இந்தியாவிலேயே கொரோனாவை விரைவாகக் கட்டுப்படுத்திய மாநிலம் தமிழ்நாடு என்ற அந்தப் பெருமை நமக்குக் கிடைத்தது என்றால், அதற்குக் காரணம் அண்ணன் மா.சு அவர்கள்தான்.

### ஒன்றிணைந்து செயல்பட்டு கொரோனாவை ஒழித்தோம்!

நீங்கள் எல்லாம் செய்தித்தாள்கள் பார்த்திருப்பீர்கள். அந்தச் சமயத்தில் வட மாநிலங்களில் மிகப்பெரிய பாதிப்பு. நூற்றுக்கணக்கான பேர் இறந்து போய், ஒரே இடத்தில் அவர்களின் உடல்களை எரிக்கின்ற புகைப்படங்கள் எல்லாம் வந்தது. அந்தப் படம் உலகையே உலுக்கியது. ஆனால், தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட ஒரு கொடூரமான நிலை ஏற்படவில்லை. நாம் அனைவரும் சேர்ந்து உழைத்துக் கட்டுப்பாடோடு இருந்து தடுப்பூசிகள் மூலம் கொரோனாவை விரட்டி அடித்தோம்.

கொரோனா சமயத்தில் இந்த அரசின் கடமையாக மூன்று விஷயங்களை நமது முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். முதலாவது மக்கள் மத்தியில் இருந்த அந்தப் பயம். அச்சத்தைப் போக்குவது, அவர்களுக்குத் தைரியம் கொடுப்பது அந்த வேலை. இரண்டாவது கடமை பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிகிச்சை வசதியை ஏற்படுத்தித் தருவது. மூன்றாவது ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களைக் கொண்டு போய்ச் சேர்ப்பது.

இதில் முதலாவது விஷயம் மிக மிக முக்கியம். மக்கள் மத்தியில் இருந்த அச்சத்தைப் பயத்தைப் போக்க வேண்டும். அவர்களுக்குத் தைரியம் கொடுக்க வேண்டும். இதை நமது முதலமைச்சர் களத்தில் இறங்கி நடைமுறையில் செய்து காண்பித்தார்கள். முதலமைச்சர் அவர்கள் பாதுகாப்பு உடையை அணிந்து கொண்டு கோவையில் கொரோனா வார்டுக்கே சென்றார்கள். அங்கே சிகிச்சை பெற்றவர்களிடம் பேசினார்கள். அது இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்கு மிகப் பெரிய தைரியத்தைக் கொடுத்தது.

நமக்காக நம்மைப் பாதுகாக்க ஒரு முதலமைச்சர், ஒரு அரசு இருக்கிறது என்ற நம்பிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மக்களுக்குக் கொடுத்தார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் போட்டுக் கொண்ட அந்தக் கோவிட் கிட்டை போட்டுக் கொண்டு அந்த வார்டுக்குள் சென்ற புகைப்படத்தைத் தான் புத்தகத்தின் அட்டை படமாகவே நம்முடைய அமைச்சர் அண்ணன் மா.சு அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

கொரோனா ஒழிப்பு என்ற மிகப் பெரிய மிஷனுக்குத் தலைமை தாங்கியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்றால் அவருக்கு ஒரு படை தளபதியாகச் சிறப்பாகச் செயல்பட்டு செயலாற்றியவர் நம்முடைய அமைச்சர் அண்ணன் மா.சு அவர்கள். மா.சு அவர்களின் உழைப்பு சாதாரணமானது இல்லை. தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய அனைத்து மாவட்டங்களுக்கும் பயணம் செய்தார். அங்கு மருத்துவமனைகளில் எல்லாம் போதுமான படுக்கை வசதி இருக்கின்றதா, ஆக்சிஜன் வசதிகள் இருக்கின்றதா பாதிக்கப்பட்டவர்களைத் தனிமைப்படுத்த முகாம்கள் இருக்கிறதா என்று பணியாற்றியவர் தான் அண்ணன் மா.சு அவர்கள்.

எல்லாருக்கும் கோவிட் தடுப்பு ஊசி போட வேண்டும் என்று மிகப் பெரிய பணியைச் செய்தார்கள். எல்லா மாவட்டங்களிலும் கோவிட் தடுப்பூசி முகாமில் நடத்தி அதையும் வெற்றிகரமாகச் செய்து காட்டியவர் அண்ணன் மா.சு அவர்கள். எங்களுடைய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் நாங்கள் தொடர்ச்சியாகத் தடுப்பூசி முகாம்களை நடத்தினோம். ஆரம்பத்துல மக்களுக்குத் தடுப்பூசி போட்டுக் கொள்ளத் தயாராக இல்லை. பயந்தார்கள்

### வீடுதோறும் சென்று தடுப்பூசி போட வைத்தோம்!

அண்ணன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், மரியாதைக்குரிய நடிகர் விவேக் அவர்கள் மறைந்த சமயம் அது. ஆனால், நானும் நம்முடைய மாவட்ட கழகச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தெரு தெருவாகச் சென்று வீடு வீடா போய் மக்களை வெளியில் அழைத்து வந்து கொரோனா தடுப்பூசியைப் போட வைத்தோம். அப்போதுகூட எதிர்க்கட்சிகள் விமர்சனம் பண்ணினார்கள்.

> **கொ**ரோனா உடல் காத்தோம் உயிர் காத்தோம் வெறும் புத்தகம் மட்டுமல்ல. அது ஒரு ஆவணம் என்றுதான் சொல்ல வேண்டும். முக்கியமாகப் ‘பாண்டமிக் மேனேஜ்மென்ட் கைடு’ என்று சொன்னால் மிகப் பொருத்தமாக இருக்கும். நம்முடைய திராவிட மாடல் அரசு கொரோனாவை எப்படிக் கட்டுக்குள் கொண்டு வந்தது என்பதை மிகத் தெளிவாக விவரமாக அண்ணன் மா.சு. அவர்கள் இந்தப் புத்தகத்தில் எழுதி இருக்கின்றார்.

மற்ற இடங்களில் எல்லாம் கிடைக்க மாட்டேங்குது சேப்பாக்கம் திருவல்லிக்கேணியில் மட்டும் தான் தடுப்பூசி கிடைக்குது என்று சொன்னார்கள். ஆனால், என்னுடைய மக்கள் பகுதி மக்கள் அந்த விழிப்புணர்வை ஏற்படுத்தி தமிழ்நாடு முழுவதும் அனைத்து மக்களுக்கும் தைரியத்தைக் கொடுத்தது என்றால், அது சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி மட்டும் தான். ஒவ்வொரு நாளும் நான் அமைச்சர் அண்ணன் மா.சு அவர்களிடம் சென்று போராடி அந்த ஊசிகளை எல்லாம் வாங்கிக் கொண்டு போய் மக்களுக்கு அந்தப் பணியைச் செய்தோம். அதேபோல அணிந்துரையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் உட்பட அனைத்து அமைச்சர்களும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கொரோனா கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்கள் போலச் செயல்பட்டோம் என்று கூறியிருக்கிறார்கள்.

எல்லோருடைய கடுமையான உழைப்பு தான் நாம் அனைவரும் சேர்ந்து கொரோனாவை வெற்றிக் கொள்வதற்குக் காரணமாக இருந்தது. இது எல்லாவற்றையும் ஆவணப்படுத்துவது போல அமைச்சர் அண்ணன் மா.சு அவர்கள் இதில் அழகாக இந்தப் புத்தகத்தில் எழுதி இருக்கிறார்.

ஆங்கிலத்திலே ஃபர்ஸ்ட் ஹேண்ட் அக்கவுண்ட் என்று சொல்வார்கள். அதில் சம்பவத்தை நேரில் பார்த்தவரே அதைப்பற்றி எழுதி பதிவு செய்பவர் என்று அதற்குப் பெயர். அதேபோலத் தமிழ்நாடு என்பது எப்படிக் கொரோனாவை வென்றது என்பதை அந்தத் துறைக்கான அமைச்சரே எழுதியிருப்பது மிக மிக ஒரு சிறப்பான ஒரு முன்னெடுப்பு. இதையெல்லாம் நான் பதிவு செய்தாக வேண்டும். இல்லையென்றால் யாராவது வந்து எதையோ எழுதி அது வரலாறு என்று நம்ம கிட்டே சொல்லுவாங்க. இதை இப்போது எழுதவில்லை என்றால் ஒரு இருபது வருடத்திற்குப் பிறகு 30 வருடத்திற்குப் பிறகு உலகம் முழுவதும் கோவிட் வந்தது.

### அனுபவங்களையே புத்தகமாக எழுதலாம்!

பா.ஜ.க. ஆண்டு கொண்டிருந்ததால் மோடி ஆட்சியில் இருந்ததால் இந்தியாவுக்கு மட்டும் கோவிட் வரவில்லை என்று சொன்னாலும் சொல்வார்கள். அதனால் இந்த மாதிரி பதிவுகள் எல்லாம் மிக மிக முக்கியம். காலம் காலமாக அது தான் இங்கு நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் எழுதுவது தான் நமது வரலாறாக இருந்தது. இப்போது அந்தக் கதை எல்லாம் இப்ப நடக்காது. நாங்களும் எழுத ஆரம்பித்து விட்டோம். படிக்க ஆரம்பித்து விட்டோம்.

அண்ணன் மா.சு அவர்களைப் போலப் பல எழுத்தாளர்கள் நம்மில் இருந்து உருவாக வேண்டும். புத்தகம் எழுதுவது என்றால் ஏதோ உலக விஷயத்தைப் பற்றி எல்லாம் எழுத வேண்டும் என்று இல்லை. அவரவர் சார்ந்திருக்கக் கூடிய துறையைப்பற்றியும், அதில் அவர்கள் பெற்றிருக்கக்கூடிய அனுபவங்கள் பற்றியும் புத்தகமாக எழுத வேண்டும்.

அதிலிருந்து ஆயிரம் செய்திகளை அடுத்தத் தலைமுறை சேர்ந்தவர்களுக்குக் கிடைக்கும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இப்படித்தான் நெஞ்சுக்கு நீதி என்னும் புத்தகத்தை எழுதியிருக்கிறார். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் ‘உங்களில் ஒருவன்’ என்ற புத்தகத்தை எழுதியிருக்கின்றார். உங்களுடைய அனுபவங்களை ஆவணப்படுத்த வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்போடும் உரிமையோடும் நான் கேட்டுக்கொள்கின்றேன். புத்தகங்களை எழுதுவது காட்டிலும் முக்கியமானது சிறந்த புத்தகங்களைப் படிப்பது.

நம்முடைய இளைஞர்கள், மாணவர்கள் நிறையப் புத்தகங்களைப் படிக்க வேண்டும் பாடநூல்களைத்தாண்டி நிறையப் புத்தகங்களை நீங்கள் வாசிக்க வேண்டும். சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் பொதுமக்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை அதிகப்படுத்த வேண்டும் என்று கலைஞர் பேரில் கலைஞர் நூற்றாண்டு நடமாடும் நூலகத்தைத் தொடங்கி வைத்திருக்கின்றோம். அந்த நூலகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வட்டத்திற்குச் செல்லும். நடமாடும் நூலகத்தில் 1500 புத்தகங்கள் உள்ளன. தொகுதி முழுவதும் இருக்கக்கூடிய மாணவர்கள் அதன் மூலம் பயன் பெற்று வந்துக்கொண்டிருக்கிறார்கள். கலைஞருடைய நூற்றாண்டையொட்டி 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரையில் மிகப்பெரிய கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் துவங்கி வைத்தார்கள்.

நாம் சார்ந்திருக்கக்கூடிய தி.மு.க இளைஞரணியின் சார்பாகக் கலைஞர் நூற்றாண்டில் எங்களுடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு மூன்று பணிகளை மேற்கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் தொடங்க வேண்டும் என்பது எங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளில் ஒன்று.

இதுவரை இளைஞர் அணியின் சார்பாகத் தமிழ்நாட்டில் 15 சட்டமன்ற தொகுதிகளில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் தொடங்கி வைத்திருக்கிறோம். ஒவ்வொரு நூலகத்திலும் குறைந்த பட்சம் ஆயிரத்து 500 புத்தகங்கள் இருக்கின்றன. இது போன்ற புத்தகங்களையும் நூலகங்களையும் பயன்படுத்திக் கொள்ள இளைஞர்களும் மாணவர்களும் முன்வர வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

### இதுவழிகாட்டியாக அமைந்துள்ள புத்தகம்!

இன்னொரு பெருந்தொற்று வந்தால் அதை எப்படிக் கையாள வேண்டும் என்பதற்கான ஒரு வழிகாட்டியாக இந்தப் புத்தகம் உள்ளது. அண்ணன் மா.சு அவர்களின் இந்தப் புத்தகம் ஒவ்வொருடைய இல்லத்திலும் இருக்க வேண்டும். இன்னும் சொல்ல போனால் ஒவ்வொரு மருத்துவமனையிலும் இந்தப் புத்தகம் இருக்க வேண்டும். நம்முடைய தமிழ் புத்தகம் வெளியில் வெளியிடும்போது நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கி கொண்டிருப்பவர், பூமியில் இருந்து புதையல் வருவது போல வந்தது என்று சொன்னார். ஆனால் ஆங்கிலப் புத்தகம் அப்படி வரவில்லை பூமியில் இருந்து ஒரு பெரிய பூகம்பம் போல வந்தது. அதிலும் நம்முடைய டாக்டர் மோகன் காமேஸ்வரன் பயந்துவிட்டார். அவர் காதுமூக்கு தொண்டடை மருத்துவர். என்னை வைத்துக் கொண்டு இப்படிப் பட்டாசு எல்லாம் வெடிக்கிறீர்களே என்று நினைப்பார்.

இந்த இரண்டு புத்தகங்களும் சிறப்பான முறையில் வந்திருக்கிறது. அண்ணன் மா.சு அவர்களுக்கு மீண்டும் என்னுடைய வாழ்த்துகள். அவரது மக்கள் பணி கழகப் பணியோடு எழுத்து பணியும் தொடரட்டும் என்று கூறி உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பொங்கல் நல்வாழ்த்துக்களைக் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

முன்னதாக ‘திருமகள் நிலையம்’ பழனியப்பன் வரவேற்புரையாற்றினார். மூத்த பத்திரிகையாளர் இந்து என்.ராம், மருத்துவர் மோகன் காமேஸ்வரன் ஆகியோர் புத்தகத்தைப் பெற்றுக்கொண்டு உரையாற்றினார். நிகழ்ச்சியை கவிஞர் இளைய கம்பன் தொகுத்து வழங்கினார். மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ஷமூர்த்தி நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், தமிழச்சி தங்கபாண்டியன், ராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் கணபதி, தாயகம் கவி, அசன் மவுலானா, பிரபாகரராஜா, துணை மேயர் மகேஷ்குமார், கவிஞர்கள் மனுஷ்யபுத்திரன், சல்மா, நக்கீரன் கோபால், ஓய்வுபெற்ற ஐபிஎஸ் அதிகாரி சந்திரசேகர், காசிமுத்துமாணிக்கம், வேளச்சேரி மணிமாறன், அமைச்சர் மா.சுப்பிரமணியனின் குடும்பத்தார், எமரால்டு பதிப்பகத்தைச் சேர்ந்த ஒளிவண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் பொங்கல் விழா ஜனவரி 14.1.2024 முதல் 16.1.2024 வரை சிறப்பாக கொண்டாடப்படவுள்ளதை யொட்டி, 13.01,2024 அன்று தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு இல்ல முதன்மை உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் சாட்டர்ஜி முன்னிலையில் வைகை தமிழ்நாடு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள பொருட்காட்சி மற்றும் தமிழ் உணவு அரங்கங்களை திறந்து வைத்து, பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் அரசு உயர் அதிகாரிகள் ஆகியோர் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை கலைஞர் அரசு மகளிர் கலைக்கல்லூரி அருகில், சேஷய்யா சாலை சந்திப்பில், தமிழ்நாடு அரசு சாலைப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து துறையின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற, சாலைப் பாதுகாப்பு மற்றும் ஓட்டுநர்களுக்கான சீட் பெல்ட் அணியும் விழிப்புணர்வு பேரணியினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் 13.01.2024 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், வட்டார போக்குவரத்து அலுவலர் ப.ஜெய்சங்கர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை!

# தலைஞாயிறு மீன் வளக் கல்லூரியில் ரூ. 2.5 கோடி மதிப்பீட்டில் 2 கட்டிடங்கள்!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்! என்.கௌதமன் பங்கேற்பு!

நாகை. ஜன.15-

நாகை மாவட்டம் தலைஞாயிரில் அமைந்துள்ள மீன் வளப் பல்கலைக்கழகம், மீன் வளக் கல்லூரி மற்றும்ஆராய்ச்சி நிலையக் கல்லூரியின் புதிய கட்டிடங்கள் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமைத் தாங்கினார். நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என். கௌதன், மாவட்ட வருவாய் அலுவலர் பேபி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மீன் பதனத் தொழிற்சார் காப்பகம் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டிடத்தையும், கடலோர மீனவர்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 1,5 கோடி மதிப்பீட்டில் கடற்சார் பொறியியல் பணிப்பட்டரை ஆகிய புதிய கட்டிடங்களை மீன் வளம், மீனவர் நலன்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்

நிகழ்ச்சியில் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், கற்பகம், தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா. குமார், சீர்காழி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பொதுக்குழு உறுப்பினர் எல். எஸ்.ஈ.பழனியப்பன், தலைஞாயிறு பேரூர் செயலாளர் சி.சுப்பரமணியன், ஒன்றிக்குழு தலைவர் ஆர்.ஜி.தமிழரசி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தியாக.விஜயேஸ்வரன், கல்லூரியின் முதல்வர் பலசுந்தரி, மாவட்ட தி.மு.க. சார்பு அணி அமைப்பாளர்கள் சத்தியமூர்த்தி, புவனேஸ்வரி, தலைஞாயிறு பேரூராட்சி முன்னாள் தலைவர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் மீன் வளம், மீனவர் நலன்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பேசுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீனவர்கள் நலன் காக்கவே முழு கவனம் செலுத்தி வருகிறார். மீன் உற்பத்தியை பெருக்கி கிராம புற பொருளாதாரத்தை பெருக்க பல நடவடிக்கை மெற்கொண்டு வருகிறார். மாநிலத்தில் உள்ள நீர் வள ஆதாரத்தில் இருந்து மீன் வளத்தை பெருக்குவது அரசின் கொள்கையாகும்.

நவீன தொழில் நுட்பங்களை பயன் படுத்தி மீன் உற்பத்தியை அதிகரிக்க அரசு கவனம் செலுத்தி வருகிறது. கடல் மீன் வளத்தை பாதுகாக்க செயற்கை உறைவிடங்கள் அமைத்தல், கூண்டில் மீன் வளர்த்தல், கடல் மீன் மற்றும் இறால் குஞ்சுகளை இருப்பு செய்தல் போன்ற திட்டங்கள், உள்நாட்டு மீன் வளத்தை காக்க ஆறு, குளம் மற்றும் நீர் தேக்கங்களில் மீன் இருப்பு செய்தல், நீர் தேக்கங்களில் கூண்டுகளில் மீன் வளர்த்தல், ஆற்றில் மீன் பிடிக்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க காவிரி, பவானி மற்றும் தமரபரணி ஆற்று படுகைகளில் மீன் குஞ்சு இருப்பு செய்தல் ஆகிய முக்கியமான திட்டங்க ளாக நடைமுறை படுத்தப்பட்டுள்ளது என்பதை சுட்டி காட்ட கடமை பட்டுள்ளோம். கடல் மீன் உற்பத்தி 6லட்சம் டன்னாகவும், உள்நாட்டு மீன் என்பது 2 லட்சத்து 32 ஆயிரமாகவும் உள்ளது.

இது வரை இல்லாத அளவு 1 லட்சத்து 23 ஆயிரம் டன் கடல் மீன் ஏற்றுமதி செய்யப்பட்டு சுமார் ரூ.7 ஆயிரம் கோடி அன்னிய செலவாணி ஈட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் பொறுப்பு ஏற்றப் பிறகு பல்கலை கலகத்தில் மீனவ சமுதாய மாணவர்களுக்கு மீன் வள இளங்கலை பட்டபடிப்புக்கு இட ஒதுக்கீடாக 5 சதம் என்று இருந்தை 20 சதவீதமாக உயர்த்தி அந்த மீனவர்களை காக்கின்ற பணியை தமிழக முதல்வர் அவர்கள் செய்துள்ளார்கள். அதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் 25 மீனசமூதாக மாணவர்கள் இந்த மீனவ பல்கலைகழகத்தில் கல்வி பயின்று வருகிறார்கள். பெண்களுக்கு உயர் கல்வி வழங்க வாய்ப்பை ஏற்படுத்த தமிழக முதல்வர் ஆணைப்படி தமிழ் கல்வி பயின்ற மாணவிகளுக்கு மாதம் ரூ. 1000 புதுமை பெண் திட்டம் மீனவர் கல்லூரியில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து விழிப்புணர்வு மற்றும் வழிக்காட்டுதலுக்கு தமிழக முதல்வரின் கனவு திட்டமாக ஏழை எளிய மாணவர்களின் கல்வி வளங்களை பெருக்குகிறது.

மீனவர்கள், மீன் வளப்பவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை பெருக்கி சமூக பொருளாதாரம் மேம்பாடு அடைய தமிழ்நாடு மீன் வள பல்கலைகழகங்கள் புதிய தொழில் நுட்பங்களை கண்டறிந்து மீனவர்கள், மீன் வளப்பவர்கள் பயனடையும் வகையில் தொடர்ந்து செயலாற்றிட வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் மீன் பிடி தடை காலத்திற்கு கடந்த காலத்தில் ரூபாய் 5 ஆயிரம் வழங்கியதை ரூபாய் 6 ஆயிரமாக வழங்கி வருகிறார். மீன் பிடிக்கும்போது காணாமல் போகும் மீனவர் குடும்பங்களுக்கு தினப்படி ரூ.250 என்று இருந்ததை ரூ.350 ஆக உயர்த்தி வழங்கியுள்ளார். இயற்கை மரணம் அடையும் மீனவ நலவாரிய உறுப்பினர்களுக்கு நிவாரணம் ரூ. 15 ஆயிரத்தில் இருந்து ரூ.25 ஆயிரமாக உயர்த்தி வழங்கியுள்ளார்.

மீன் பிடி படகுகளுக்கு உரிமை வழங்கும் காலம் வருடம் தோறும் கடந்த கலத்தில் அந்த படகை பார்க்க வேண்டும் என்ற நிலையை மாற்றி 3 வருடத்திற்கு ஒரு தடவை உரிமை பெருகின்ற வகையில் செய்தால் போதும் என்ற திட்டத்தை நம்முடைய முதல்வர் கொண்டு வந்துள்ளார். இது வரை எந்த முதலமைச்சரும் மீனவர்களுக்கு என்று தனி மாநாடு கண்டது இல்லை. இராமநாதபுரத்தில் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் மீனவர்களை எல்லாம் அழைத்து கருத்துகளை கேட்டு மீனவர்களின் நலன் காக்கும் முதமைச்சராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உள்ளார்கள். அந்த மாநாட்டில் மீனவர்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை தந்தார்கள். தந்த வாக்குறுதிகளை உடனே நிறைவேற்ற எங்களுக்கு ஆணையிட்டார்கள்.

மீன் பிடி தடை காலத்தில் ரூ. 5 ஆயிரம் என்று இருப்பதை ரூ.8 ஆயிரம் என்று அறிவித்தார்கள். 60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்களுக்கு மீன் பிடி தடை காலத்தில் தடைகால நிவாரணத்தை அவர்களுக்கும் உண்டு என்று தடைக் காலத்தில் அனைவருக்கும் வாங்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்துள்ளார்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். நாட்டு படகுகளுக்கு டீசல் அதிக மாக வேண்டும் என்று கேட்டார்கள். அதையும் அறிவித்தார்கள். விபத்து காப்பிடு காலத்தில் விடுப்பட்ட 6 ஆண்டுக்கு முன்னர் இன்சூரன்ஸ் கொடுக்க வேண்டும். அந்த இன்சூரன்ஸ் பணத்திற்கு தமிழ்நாடு அரசு பணம் கட்டியுள்ளது.

ஒன்றிய அரசு அதை சரியா செய்யாத காரணத்தால் இன்சூரன்ஸ் பணம் வரவில்லை. அந்த பணத்தை கேட்டு கேட்டு அவர்கள் கொடுக்க வில்லை. நம்முடைய முதலமைச்சா அவர்கள் ஒன்றிய அரசு பணம் கொடுக்க வில்லை என்றாலும் பரவாயில்லை, நம்முடைய அரசு 250 மீனவர்களுக்கு அந்த தொகையை கொடுக்கும் திட்டத்தை கொண்டு வந்தது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தான். மீன் பிடிக்கும் போது காணாமல் போனால் அந்த குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவது என்பது ஏழரை ஆண்டுகள் கழித்து நிவாரணம் வழங்க வேண்டும் என்றுள்ளது. அதற்கு அந்த தடையை போக்க வேண்டும் என்று முதல்வர் அதற்கான ஒரு சூழல் நிதியை தந்து அவர்களுக்கு நிவாரணம் வழங்கிடலாம் அந்த கால கட்டம் வரும் போது அந்த இன்சூரன்ஸ் தொகை நாம் பெற்றுக் கொள்ளலாம் என்று அந்த சூழல் நிதியை தந்து தமிழகத்தன் மீனவர்களை காக்கின்ற முதல்வராக நம்முடைய முதல்வர் அவர்கள் உள்ளார்கள்.

மீனவர்க ளுக்கு கூட்டறவு மூலம் கடன் வழங்கப் பட்டுள்ளது. மீனவர்களுக்கு இலவச வீடுகளுக்கு பட்டா இல்லாமல் இருந்தது. ராமநாதபுரத்தி ல் நடைபெற்ற மாநாட்டில் எல்லோருக்கும் பட்டா வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அரசால் வீடு கட்டி கொடுக்கப் பட்ட மீனவர்களுக்கு பட்டா இல்லாத நிலையை மாற்றி பட்ட வழங்கிய முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் தான். கடலில் புதிதாக வெளிநாடு கப்பல் கள் போன்று கடலில் அன்னியர்கள் வருகிறார்கள் என்றால் அதை அரசுக்கு முதலில் தெரிவிப்பது மீனவர்கள். இந்த நாட்டை பாதுகாக்கக் கூடியவர்கள் மீனவர்கள். சென்னை, தூத்துக்குடியில் வெள்ளத்தின் போது மீனவர்கள் தன்னுடைய படகை எடுத்து வந்து மக்களை மீட்டவர்கள் மீனவர்கள் சகோதரர்கள். இந்த நாட்டில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பவர்கள் மீனவர்கள். கல்லூரியில் படிக்கும் மாணவ, மாணவிகள் நன்றாக படித்து வரவிருக்கும் காலத்தில் மீனவர்க ளின் வாழ்வு உயர்த்தும் மாணவர்களாக அமைய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பேசினார்.



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர். மணிவண்ணன், கற்பகம், பொருளாளர் மு.லோகநாதன் மற்றும் பலர் உள்ளனர்.

## நாமக்கல் மேற்கு மாவட்டம் முழுவதும்

# வண்ணக் கோலமிட்டு சமத்துவப் பொங்கல் வைத்து கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு



நாமக்கல், ஜன. 15-

நாமக்கல் மேற்கு மாவட்டஆலோசனைகூட்டம் நேற்று (12.01. 2024) காலை 11.00மணிக்கு திருச்செங்கோடு, வேலூர்ரோடு, தளபதியார்அரங்கில்நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர்எஸ்.எம்.மதுரா செந்தில்தலைமையில்நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்ட னர். முடிவில் மாவட்ட கழக செயலாளர் அவர்கள் தலைமை கழகத்தில்அறிவிக்கப்பட்டதீர்மானங்களின் அடிப்படையில் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்க ளை விளக்கிப் பேசினார்.

சமத்துவப் பொங்கலைக் கொண்டாடுவோம்!

தீர்மானம் - 1 தமிழர்களின்பாரம்பரியமிக்கதை 1 தமிழ் புத்தாண்டை முன்னிட்டு ஏழை,எளியோர்களும் பொங்கள் திருநாளை கொண்டாடும் வகையில், விவசாய பெருமக்களின் கோரிக்கையை ஏற்று ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும்ஆயிரம்ரூபாய் மற்றும் பொங்கல் சிறப்பு பரிசு தொகுப்பு வழங்க ஆணையிட்டகழகதலைவர் தமிழ்ழாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்தநன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

தீர்மானம்-2"கேலோஇந்தியா" விளையாட்டுப் போட்டி வரும் ஜனவரி 19 ஆம் தேதில் முதல் 31ஆம் தேதி வரை சென்னை, நுங்கம்பாக்கத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் டென்னிஸ் விளையாட்டு அரங்கத்தில் நடைபெறவுள்ளதால், இப்போட்டி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒன்றிய, நகர, பேரூர்களில் சிறுவர், சிறுமிகளுக்கு விளையாட்டுப் போட்டிகள்நடத்திட வேண்டும்என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தீர்மானம்-3 கழகத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சி 'எல்லோருக்கும் எல்லாமும்' என்ற சமத்துவக் கொள்கையின் அடிப்படையில்நடைபெறுகிறது. தமிழ்நாட்டில்அனைவரும் ஒருவருக்கொருவர் உடன்பிறப்புகளாய்,சமத்துவமாக வாழ்கிறோம் என்பதை பறைசாற்றும்வகையில்,கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி, நாளை மற்றும் நாளை மறுநாளில் அனைத்து ஒன்றிய,நகர,பேரூர்,வார்டு மற்றும் கிளைக் கழகங்களின் சார்பில் சமத்துவப் பொங்கல் கொண்டாடிட வேண்டும்எனகேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு பகுதிகளில் பொங்கல் வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு,எல்லோரும்சமம் என்பதை வலியுறுத்தும் வகையில் ஒன்றிய, நகர, பேரூர்பகுதிகளில்'சமத்துவ பொங்கல்' என வாசகத்துடன்கோலமிட்டும்,அதனை படம்பிடித்துசமூகஊடகங்களில், "சமத்துவப் பொங்கல்"என்றஉடன்வெளியிட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைத்து பகுதிகளிலும் இச்செய்தியை கொண்டு சேர்த்து மாவட்ட முழுவதும் பொங்கலை சமத்துவப் பொங்கலாக கொண்டாடுவோம். மேலும், இன்று முதல் ஒலிபெருக்கிகள் மூலம் தமிழ் கொள்கைப் பாடல்களை ஒலிக்கச் செய்திட வேண்டும்.


இவ்வாறு மாவட்டச் செயலாளர்எஸ்.எம்.மதுரா செந்தில் தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் சமத்துவப் பொங்கல் விழா மயிலாடுதுறையில் நடைபெற்றது. பொங்கல் விழாவை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்தார். உடன் சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தியாகி நடராசன் (தாளமுத்து)
### சனவரி 15 (1939)



சென்னை பண்ணைக்கார ஆண்டியப்பன் தெருவைச் சேர்ந்த நடராசன், தன் பெற்றோரிடம் "நான் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட விரும்புகிறேன். தமிழர்களின் பின் சந்ததியர்க்காகச் சிறை செல்ல நான் பின்னடையப் போவதில்லை" என்றபோது, முழுமனதோடு தன் ஒரே மகனுக்கு ஒப்புதல் அளித்தார்கள் பெற்றோர்.

5.12.1938 அன்று மறியல் களம் சென்று இந்தி எதிர்ப்புப் போரில் பங்குபெற்று ஆறு மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறை சென்றார்.

சிறையில் காய்ச்சல் ஏற்பட்டு நிலைமை கவலைக்கிடமான போதும், சிறைக் காவலர்கள் மன்னிப்புக் கேட்டுவிட்டு வெளியேறும்படி எவ்வளவோ மன்றாடினர், வற்புறுத்தினர். ஆனாலும் "செத்தாலும் சிறையில் சாவேனே ஒழிய, மன்னிப்பு என்ற பேச்சே கிடையாது" எனத் தெரிவித்து சிறையிலேயே தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டவர்.

சிறைச் சாலையில் இறந்துபோன நடராசனும், தாளமுத்துவும்தான் இந்தி எதிர்ப்புப் போரில் முதல் களப்பலிகள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.




ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட திண்டல் சக்திநகர் நியாயவிலை கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி சேலைகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்தகுமார், துணை மேயர் வி.செல்வராஜ், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராஜ்குமார், நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் பானுமதி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற கேலோ இந்தியா 2023 போட்டிகளை முன்னிட்டு மினி மாரத்தான், திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, கட்டுரை போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 18 நபர்களுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அரசு உறுதிமொழி குழுத் தலைவர் தி.வேல்முருகன், சட்டமன்ற உறுப்பினர்கள் கு.பொன்னுசாமி, பெ.ராமலிங்கம், ஈ.ஆர்.ஈஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தையும்

# முதல் மாநிலமாகப் பயிற்றுவிக்கிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, ஜன.15 -

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தையும் முதல் மாநிலமாகப் பயிற்றுவிக்கிறோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

கணினிக்கல்வியைப் பயிற்றுவித்ததில் முன்னோடி மாநிலமாக விளங்கியதைப்போல் AI தொழில்நுட்பத்தையும் முதல் மாநிலமாகப் பயிற்றுவிக்கிறோம். Miles to go...

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.


Outlook

Tamil Nadu Schools Introduce TEALS Program For AI Training

Tamil Nadu schools mark a historic stride in education as they introduce the Technology Education and Learning Support (TEALS) program, a pioneering initiative by Microsoft, to provide AI training for the first time.

mkstalin 13.01.2024

மனித வன விலங்கு மோதல்களால் ஏற்படும்

# உயிரிழப்பு - நிரந்தர இயலாமைக்கான நிவாரணத் தொகை ரூ.10 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜன. 14 -

மனித வனவிலங்கு மோதல்களில் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் நிரந்தர இயலாமைக்கான நிவாரணத் தொகை ரூ.5 இலட்சம் என்பது ரூ.10 இலட்சமாக உயர்த்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

மனித வனவிலங்கு மோதல்களை குறைக்க தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதே நேரத்தில் மனிதவனவிலங்கு மோதல்களில் பாதிக்கப் பட்டவர்களுக்கு போதுமான இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்கிட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு 3.11.2021 அன்று வெளியிட்ட அரசாணையின்படி இத்தகைய மோதல்களில் மனித உயிர் இழப்பு அல்லது நிரந்தர இயலாமைக்கான இழப்பீட்டுத் தொகை ரூ.4 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்பட்டது. இந்த இழப்பீடு கோரிக்கைகளை உடனடியாக வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு 10 கோடி ரூபாய் நிறும நிதி (Corpus Fund) ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், மனிதவனவிலங்கு மோதல்களில் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு கூடுதல் நிவாரண உதவித் தொகை வழங்கிட வேண்டுமென அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த முறையீடுகளை மிகுந்த பரிவுடன் பரிசீலனை செய்து இத்தகைய நிகழ்வுகளில் பாதிக்கப்படும் குடும்பங்களின் சிரமங்களைக் களைவதற்காக, மனித உயிர் இழப்பு மற்றும் நிரந்தர இயலாமைக்கான இழப்பீட்டுத் தொகை ரூபாய் 5 லட்சம் என்பதை ரூபாய் 10 லட்சமாக இருமடங்கு உயர்த்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இது உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளது.

மேற்கண்டவாறு அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) தெரிவித்துள்ளார்.

சென்னையில் பல்வேறு வகையான கலை நிகழ்வுகளுடன்

# “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா”

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.15 -

சென்னை மாநகரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன் “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா”வை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2024) சென்னை, தீவுத்திடலில், தமிழ் மண்ணின் கலைகளைக் களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாநகரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் நடத்தப்படும் “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா”வை தொடங்கி வைத்து, கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

சென்னை மாநகரில், தீவுத்திடல், கொளத்தூர் - மாநகராட்சி விளையாட்டு மைதானம், பெரம்பூர் முரசொலிமாறன் மேம்பாலப் பூங்கா, இராயபுரம் - ராபின்சன் விளையாட்டு மைதானம், மயிலாப்பூர் - நாகஸ்வரராவ் பூங்கா, செம்மொழிப்பூங்கா, நுங்கம்பாக்கம் - மாநகராட்சி விளையாட்டு திடல், திருவல்லிக்கேணி - பாரத சாரண சாரணியர் திடல், தி.நகர் நடேசன் பூங்கா எதிரிலுள்ள மாநகராட்சி மைதானம், பெசன்ட் நகர் - எலியட்ஸ் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை, சைதாப்பேட்டை - மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானம், கே.கே. நகர் - சிவன்பூங்கா, வளசரவாக்கம் - பழனியப்பா நகர், லேமேக்ஸ் பள்ளி வளாகம், அண்ணா நகர் - கோபுரப் பூங்கா, கோயம்பேடு - ஜெய்நகர் பூங்கா, அம்பத்தூர் - எஸ்.வி. விளையாட்டு மைதானம், எழும்பூர் - அரசு அருட்காட்சியகம் ஆகிய 18 இடங்களில் சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா இன்று (14.1.2024) முதல் 17.1.2024 வரை மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை நடைபெறுகிறது.

சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழாவில், செவ்வியல் பாடல்கள், நாட்டுபுறப் பாடல்கள், கானா பாட்டு, ராப் இசை, இருளர் பாட்டு, காணிக்காரன் பாட்டு, நையாண்டி மேளம், கரகாட்டம், பறையாட்டம், புரவி, காளை, மயிலாட்டம், பம்பையாட்டம், படுகர் நடனம், துடும்பு, மகுடம், சிலம்பாட்டம், கொம்பு, தாரை, ஆலியாட்டம், சேவையாட்டம், கும்மியாட்டம், ஜிக்காட்டம் போன்ற பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

இந்த விழாவில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி கனிமொழி, ஆ.ராசா, டாக்டர் கலாநிதி வீராசாமி,

திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, இ.பரந்தாமன், திருமதி தமிழரசி, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், கலை பண்பாட்டுத்துறை இயக்குநர் சே.ரா. காந்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவை

# முரசறைந்து தொடங்கி வைத்தேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஜன.15 -

சென்னை சங்கமம் நம்மு ஊரு திருவிழா குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்நிகழ்ச்சியை முரசறைந்து தொடங்கி வைத்தேன் என்று குறிப்பிட்டுள்ளார்.



சென்னை சங்கமம் நம்மஊரு திருவிழாவை தொடங்கி வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூகவலைத்தளப்பதிவு வருமாறு:-

**தாரை தப்பட்டை பறையிசை முழங்க ஆர்ப்பரித்த சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவை முரசறைந்து தொடங்கி வைத்தேன்.**

**சென்னையின் 18 இடங்களில் மாலை 6 முதல் 9 மணி வரை நடைபெறும் இந்த சென்னை சங்கமம் 2024 நிகழ்ச்சியை உங்கள் குழந்தைகளோடு காணுங்கள். நம் கலைகளைக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யுங்கள்.**

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# இராமநாதபுரத்தில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

## காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

இராமநாதபுரம், ஜன.15 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், அவர்களின் வழிகாட்டுதலின்படி இராமநாதபுரம் திராவிட முன்னேற்றக் கழக தகவல் தொழில் நுட்ப அணியின் சார்பில் சமூக ஊடகங்கள் மற்றும் வலைதளங்களுக்கான பயிற்சி பாசறையை இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ .முருகேசன், மண்டல தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் விஜய கதிரவன், மாவட்டத் துணைச் செயலாளர் கே. கருப்பையா,இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர். கே. கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் பகத்சிங் சேதுபதி, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் கே சம்பத் ராஜா,வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் எம் கருணாநிதி மாவட்ட தலைவர் ஆர் வீர பாண்டியன் இலக்கிய அணி மாவட்ட தலைவர் மிஷா ஆ.வே. அரவரசன், அமைப்பாளர் வை. மணிமாறன்

சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு முகமது முக்தார், சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் முகமது சலாவுதீன், தொண்டரணி அமைப்பாளர் மாவட்ட தலைவர் ராமமூர்த்தி, மாவட்ட அமைப்பாளர் பிடி ராஜா, தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் கா.தங்கராஜ், மாவட்ட அமைப்பாளர் மு.ரவிக்குமார், நெசவாளர் அணி மாவட்ட தலைவர் சௌ கணேஷ் பாபு, மாவட்ட அமைப்பாளர் கோ.சந்திரசேகர், பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் பாஸ்கர பாண்டியன், மாவட்ட தலைவர் கு அருண், மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் தமிழ்ச்செல்வி போஸ், மாவட்டத் தலைவர் மஞ்சுளா, விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் ரா .அய்யனார், தலைவர் பாலகிருஷ்ணன்,

விவசாய தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் அ. அர்ச்சுனன்,நாகரத்தினம், மீனவர் அணி மாவட்ட தலைவர் வே. வில்லாயுதம், மாவட்ட அமைப்பாளர் வர்த்தக அணி மாவட்ட தலைவர் நா திருமாறன், மாவட்ட அமைப்பாளர் மு தமிழ்செழியன்,

மகளிர் தொண்டரணி மாவட்ட தலைவர் பிரபா சாலமன், மாவட்ட அமைப்பாளர் அமிர்தவல்லி மருத்துவர் அணி மாவட்ட தலைவர் தி சந்திர மோகன், மாவட்ட அமைப்பாளர் மு ஆசிக் அமீன்,

மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் சே சுரேஷ், அமைப்புசாரா தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் சுந்தர வடிவேலு, மாவட்ட அமைப்பாளர் ராஜீவ் காந்தி, அயலக அணி மாவட்ட அமைப்பாளர் மா பன்னீர்செல்வம், மாவட்ட தலைவர் நா முகமது அனிபா,

ஆதிதிராவிடர் நல உரிமை பிரிவு மாவட்டத் தலைவர் மு தங்கவேலு, மாவட்ட அமைப்பாளர் வி ஆனந்தம் /மாநில செயற்குழு உறுப்பினர் மிஷா அகமது தம்பி,பரமக்குடி நகர் செயலாளர், நகர் மன்ற உறுப்பினர் ஜீவரத்தினம் மற்றும், மற்றும் அனைத்து அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் துணைத் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் நரசிங்கபுரத்தில் கழக அரசின் பொங்கல் பரிசு தொகுப்பினை நியாயக் விலைக் கடையில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரொக்கம்ரூ.1000 மற்றும் பரிசு பொருட்களை நரசிங்கபுரம் நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர், நகர செயலாளர் வேல்முருகன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் வார்டு கவுன்சிலர்கள் பிரகாஷ், ஜோதி, செல்வம், சின்னப்பையன், செல்வகுமார் நகர நிர்வாகிகள் ராமசாமி, இளவரசு, பரமசிவம், சாந்தி, விஜயகுமார், புலித்தேவன், பத்திரம் ,மனோகரன், அசோகன், கதிர்வேல், ஞானசேகர், சங்கர், பாண்டியன், ரவி, முருகேசன், கருணாநிதி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி, ஜெயங்கொண்டம் நகராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023 – 2024 கீழ், ரூபாய் 31.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு பணிகளை சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி ஆணையர் அசோக்குமார், நகர் மன்ற தலைவர் சுமதி சிவக்குமார், துணை தலைவர் வெ.கொ.கருணாநிதி, நகராட்சி பொறியாளர்(பொ) விஜயகார்த்தி, நகராட்சி மேலாளர் அன்புச்செல்வி, நகராட்சி பணி மேற்பார்வையாளர் பூபதி, நகர்மன்ற உறுப்பினர்கள், நகர கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி முன்னெடுப்பில் பயிற்சி வகுப்பு கூட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கைக்கிணங்க, கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி ஆலோசனைக்கிணங்க தகவல் தொழில்நுட்ப மாநிலச் செயலாளர் டி. ஆர். பி. இராஜா அறிவுறுத்தலின் படி விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு கூட்டம் மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. தலைமையில் காணொளி வாயிலாக நடைபெற்றது. கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனைகளை வழங்கினார். மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ப. அன்பரசு வரவேற்புரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம். தேன்மொழி மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் சாம்பசிவம், பாலாஜி, புஷ்பராஜ், சசிரேகா பிரபு , தொகுதி நிர்வாகிகள் தேவா, விஜயகுமார், நாராயணமூர்த்தி, ரகுபதி, குரு இராமலிங்கம், வீர மணிகண்டன், கதிரவன், மகளிர் பிரிவு மகாலட்சுமி, ராதிகா ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றியச் செயலாளர்கள் க. மும்மூர்த்தி, பி. தெய்வசிகாமணி, தே. முருகவேல், வி.ஜி.பிரபாகரன், ஜி. இரவிச்சந்திரன், வே.கணேசன், ஜெ.ஜெயபால், கு.செல்வமணி, கிளியனூர் இராஜி, ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், பேரூர் செயலாளர்கள் பா.ஜீவா, சுந்தரமூர்த்தி உள்ளிட்ட மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், சி.வி.ஆர். திருமண மண்டபத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், ஏழைப்பெண்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி.க.ந.கோகுலப்பிரியா, அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி. மேகலாமுத்து, முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் திருமதி.கலைவாணி சுப்பிரமணியன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், வீட்டுவசதி வாரிய உறுப்பினர் இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### சேலம் இளைஞர் அணி 2வது மாநாட்டில்

# நாகை மாவட்ட இளைஞர் அணியினர் வெண்சீருடையில் திரளாக பங்கேற்பு!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

நாகை, ஜன.15 -

நாகை மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.ராஜேந்திரன் தலைமைத் தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ. ரவிச்சந்திரன், கற்பகம், பொருளாளர் மு.லோகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன் வரவேற்றார். கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், என்.ஆனந்த், கே.பழனியப்பன், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ.பா.மலர்வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் கோசி.குமார், இல.பழனியப்பன், எஸ்.பன்னீர்செல்வம், கே.பாண்டியன், உமாசெந்தாமரை, பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.முகமது சுல்தான், கா.அட்சய லிங்கம், சி.சுப்பரமணியன், எக்ஸ்.மரியசார்லஸ் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், பி.என்.கார்த்த, ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, முருகானந்தம், புவனேஷ்வரி, ஆர். துரைராஜ், எஸ்.வி.டி.அருள், சத்தியமூர்த்தி, அ.பாரிபாலன், இளம்.சுந்தர், எஸ்.சந்தோஷ், செ.புவனேஸ்வரி, த.தமயந்தி, வ.கமல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.அசோக், ஜி.தாமோதரன், தி.கலையரசன், எஸ்.டேனியல்சத்தயா, பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்.

கழக இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு சேலத்தில் வரும் 21ம் தேதி மாநில உரிமை மீட்பு மாநாடாக பெண்களை மீட்ட புரட்சியாளர், அரசுப் பதவிகள் வகிக்காமல் அரசாங்கத்தை வழிநடத்திய அரசியல் ஆசான் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்கள் பெயரில் பெரியார் நுழைவு வாயில், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என மூன்று சொல் திருக்குறள் தந்த திருவள்ளுவனாக, தமிழ்நாடு என பெயர் சூட்டிய தலைமகன், தி.மு.க. என்ற மாபெரும் இயக்கத்தை தோற்றுவித்த பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் அண்ணா திடல், தன் வாழ்நாளெல்லாம் தமிழ்மொழிக்காகவும், தமிழ் இனத்திற்காகவும், தமிழ்நாட்டிற்காகவும், ஓயாமல் உழைத்த ஒப்பற்ற தலைவர் சமூகப் போராளி செம்மொழிக் கண்ட சேர, சோழ, பாண்டியரான முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் கலைஞர் அரங்கம், தாடியில்லா பெரியார், தலைவர் கலைஞர் அவர்களின் அன்பு நண்பர் இனமானப் பேராசிரியர் அவர்கள் பெயரில் பேராசிரியர் மேடை, சேலத்து சிங்கம் வீரப்பாண்டியர் அவர்களின் பெயரில் வீரப்பாண்டியார் கொடி மேடை, தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சி என்று அனைவராலும் போற்றப்படுகின்ற முரசொலி மாறன் அவர்களின் பெயரில் புகைப்பட கண்காட்சி என மாநாடு முழுவதும் கழகத்தினர் பெயரை வைத்து சேலத்தில் நடைபெறும் கழக இளைஞர் அணி மாநாட்டில் வெண் சீருடையுடன் இளைஞர் அணியினர் நமது மாவட்டத்தின் சார்பில் திரளாக கலந்து கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களை கோட்டுக் கொள்வது என்றும்,

தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி ஒன்றையே குறிக்கோளாக கொண்டு நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளிலும் வாக்காளர் பட்டியலில் உள்ள மொத்த பாகங்களின் (பூத்) அடிப்படையில் 7 பாகங்களுக்கு ஒரு பொறுப்பாளர் வீதம் நியமனம் செய்யப்பட்ட பொறுப்பாளர்களின் பட்டியலை ஒரு வாரத்திற்குள் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்வது என்றும்,

தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்டு ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்ட ஓ.எம்.ஆர். படிவம் மற்றும் நோட்டு புத்தகம் இது வரை பூர்த்தி செய்து வழங்காமல் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் இனியும் தாமதப்படுத்தாமல் விரைவில் மாவட்ட கழகத்திடம் பூத்தி செய்து ஒப்படைக்குமாறு ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களை மீண்டும் வலியுறுத்தி கேட்டுக் கொள்வது என்றும்,

நாகை மாவட்டத்திற்கு நாகை மாவட்டக் கழக அலுவலகமான தளபதி அறிவாலயம் கட்டப்பட்டு வரும் நிலையில் அதன் வரவு செலவு கணக்குகளை முறையாக கையாளும் விதமாக தலைமைக் கழகம் அறிவுறுத்தலின் படி மாவட்ட தி.மு.க. எனும் வங்கி கணக்கு தொடங்கப்பட்டு அதனை நிர்வாகிக்கும் முழு பொறுப்பு மாவட்ட கழகச் செயலாளருக்கும், மாவட்டக் கழக பொருளாளருக்கும் வழங்குவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### விவசாயிகளின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையில்

# விவசாயிகளுக்கு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!



புதுக்கோட்டை, ஜன. 15 -

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டாரம், கீழாத்தூர் கிராமத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில், நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.39.46 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள, விதை சேமிப்புக் கிடங்குடன் கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையத்தினை, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 11.01.2024 அன்று திறந்து வைத்து, விவசாயிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் வேளாண்மை உழவர் நலத்துறைக்காக தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் திருவரங்குளம் வட்டாரம், கீழாத்தூர் கிராமத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில், ரூ.39.46 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள, 110 மெ.டன் கொள்ளளவு கொண்ட விதை சேமிப்புக் கிடங்குடன் கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையம் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

இம்மையம் 105.41 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டு 7 கிராம ஊராட்சிகளை சேர்ந்த 14 கிராமங்களில் உள்ள 3,307 விவசாய குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாமிகளின் 1771.50 ஹெக்டேர் விளைநிலங்களில் பயிர் செய்யப்படவுள்ள நெல், நிலக்கடலை, உளுந்து, மக்காச்சோளம் மற்றும் தென்னை உள்ளிட்ட விளைப்பொருட்களை சேமித்து வைத்து விவ சாயிகள் பயன்பெறலாம்.

எனவே இப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் அனைவரும் இம்மையத்தினை முழுமையாக பயன்படுத்திக்கொண்டு தாங்கள் விளைவித்த விளைப்பொருட்களை சேமித்து வைத்து, விளைப்பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் சமயத்தில் விற்பனை செய்து பயன்பெறலாம் என அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் வேளாண்மை பொறியியல் துறை சார்பில், தனிநபர் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு மின் இணைப்புடன் கூடிய ஆழ்குழாய் கிணறு அமைத்தல், பண்ணை குட்டை அமைத்தல், நெல் நடவு இயந்திரம் மற்றும் வைக்கோல் கட்டும் இயந்திரங்கள் உள்ளிட்டவைகளை 7 பயனாளிகளுக்கு ரூ.21,29,000 மதிப்பிலான பல்வேறு வேளாண் உபகரணங்களை 11.01.2024 அன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, ஒன்றியக் குழுத் தலைவர்கள் த வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்துறை) செல்வம், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, ஆர்.வி.செல்வம், மு.கருணாகரன், கே.வி.சுப்பையா, கே.சி.சிவக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

# குன்றாண்டார்கோவில் ஒன்றிய தி.மு.க. சார்பில் நம்ம ஊர் திருவிழா!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை!

புதுக்கோட்டை, ஜன. 15 -

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் குன்றாண்டார்கோவில் ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் விசலூர் ஆலடி கருப்பர் கோவிலில் நம்ம ஊர் திருவிழாசமத்துவ பொங்கல் மற்றும் கலை பண்பாட்டு திருவிழா நூற்றுக் கணக்கானோர் பொங்கலிட்டு, நாட்டுப்புற தெம்மாங்கு இசை நிகழ்ச்சிகளும், சிலம் பாட்ட சாகச வீர கலைகளும் இடம் பெற்று விசலிக் கோவில் குருக்கள், கீரனூர் பள்ளி வாசல் ஹஜ்ரத், கிள்ளுக்கோட்டை ஆலய பாதிரியர் ஆகிய மும்மத குருமார்கள் முன்னிலையில் வெகு சிறப்பாக தமிழர் திருநாள் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது

நிகழ்வில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர்ஒன்றிய பெருந்தலைவர் கே.ஆர். என்.போஸ், மாவட்ட துணைச் செயலாளர்கள் பெ.ராஜேஸ்வரி, எஸ்.எஸ். கருப்பையன், புதுக்கோட்டை நகரச் செயலாளர் ஆ.செந்தில், ஒன்றிய கழக செயலாளர்கள் என். சேட்டு, தவ.பாஞ்சாலன், சி.சண்முகம், ஓ.எஸ்.வெங்கடாசலம், ஆர்.ஆர்.சாமிநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் த. செல்வம், சி.சின்னராஜ், ஒன்றிய துணை பெருந்தலைவர் சித்ரா ரவிச்சந்திரன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் முனைவர் செ.குறிஞ்சிவானன், வி.என்.எம்.பால முருகன், சி.அரங்கநாயகம், எஸ். வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், தவசுமணி முருகேசன், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், ஆ.ராஜேந்திரசோழன், காதர் கனி, பெ.தெய்வானை, ஆர்.கே.ரெத்தின சபாபதி, ஜெயந்தி, டாக்டர் எஸ்.வி.ஆர்.அர்வின், சதீஷ், ஒன்றிய நிர்வாகிகள் வீரசிங்கம், கருணாநிதி, மணிவேல், திவ்யநாதன், அழகு ராஜேந்திரன், வீரக்குடி ராஜ்குமார், செங்களூர் இளையராஜா, கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.கலையரசன், சி.இளையராஜா, வீ.கனகரெத்தினம், KPM. செல்வம், தகவல் தொழில்நுட்ப அணி எழில் ராஜா, ராஜாராம் மற்றும் ஏராளமான கிளை கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு மா. சுப்பிரமணியம்

### சனவரி 15 (2013)



ஈரோடு மாவட்ட தி.மு.க. முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்

ஈரோடு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் – ஈரோடு நகராட்சி மன்றத் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

“ ‘மா.சு’ என்று கழகத்தினரால் அழைக்கப்பட்டவர். இவரது குடும்பம் கழகத்திற்காக ஆற்றிய பணிகள் ஏராளம். குறிப்பாக நெருக்கடிநிலை நேரத்தில் ஈரோட்டில் தங்குவதற்கு விடுதிகள் எல்லாம் மறுக்கப்பட்ட நிலையில், அவரது இல்லத்தில் என்னைத் தங்க வைத்து உபசரித்ததை என்னால் என்றைக்கும் மறக்க முடியாது” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ம. சங்கரலிங்கம்

### சனவரி 15 (2016)



தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரின் பகுத்தறிவுக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, அவர்கள் அடியொற்றி ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கழகப் பணியாற்றியவர்.

1964 முதல் 1984 வரையிலான இருபது ஆண்டுகள் தொடர்ந்து தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – நான்கு ஆண்டுகள் மேலவை எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றியவர்.

1998 முதல் 2004 வரை இந்திய பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக இருந்தவர்.

அண்ணா அவர்கள்மீது கொண்ட பற்றின் காரணமாக ‘அறிஞர் அண்ணா கல்லூரி’ ஒன்றினை நிறுவி, அதன் முதல்வராக இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



வேலூர் மாவட்ட தி.மு.க அவசர செயற்குழு கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார். இதில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், பொருளாளர் சி.நரசிம்மன், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட துணை செயலாளர்கள் பாண்டியன், மலர்விழி லோகநாதன், முன்னாள் அமைச்சர் டாக்டர் வீ.எஸ்.விஜய் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஜனவரி 21, சேலத்தில் நடைபெறும் தி.மு.க இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டு நிதியாக,கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரூபாய் ஒன்றரை கோடிக்கான காசோலையையும் மற்றும் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் ரூ.12 லட்சத்திற்கான நிதியும், ஆக மொத்தம் ரூபாய் ஒரு கோடியே 62 லட்சம் மாநாட்டு நிதியினை, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டம் செயலாக்கத் துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். உடன் மாவட்டப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், கழக பொறியாளர் அணி தலைவர் துரை. கி.சரவணன், அ.ஞானமுத்து, ஜி.கார்த்திகேயன், தங்க.ஆனந்தன், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ் விஜயராமன், க.முத்துக்குமார், வி.கே.மணிகண்டன், வி.ஜே அன்பழகன், குட்டிமணி ஜெகன், து.பிரபு, ஏ.ஜெயமணி, ஏ. ஜெயச்சந்திரன், பி.ராம்குமார் சே. குப்புராஜ், நா. கோபி உள்ளிட்டோர் உள்ளனர்.




முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடந்த 2021 GLA7 ஆட்சிப்பொறுப்பேற்று, கடந்த 2023 மார்ச் 31 வரை கொரோனா காலத்தில் ஆற்றிய சீர்மிகு பணிகளைத் தொகுத்து எழுதிய ”கொரோனா : உடல் காத்தோம், உயிர் காத்தோம் என்ற தமிழ் நூலினையும், ஆங்கிலத்தில் ”Corona Chronicles என்ற ஆங்கில நூலினையும் நேற்று (13–01–2024) சென்னை ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் வெளியிட, இந்து குழுமத்தின் தலைவர் இந்து என்.ராம் மற்றும் மருத்துவர் மோகன் காமேஸ்வரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். உடன் தயாநிதிமாறன் எம்.பி., முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., நக்கீரன் கோபால், எமரால்டு பதிப்பக சி.இ.ஓ., கோ.ஒளிவண்ணன், திருமகள் நிலையம் மருத்துவர் பழனியப்பன் ஆகியோர் உள்ளனர்.

# சரணடைவதில் இருந்து முனைவர் க. பொன்முடிக்கு விலக்கு! உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, ஜன.15-

முனைவர் க. பொன்முடி மற்றும் அவரது மனைவி ஆகியோர் சரணடைய விலக்களித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



கடந்த 2006-11ம் ஆண்டு இடைப்பட்ட காலத்தில் உயர்கல்வி மற்றும் கனிமவள அமைச்சராக பொன்முடி பதவி வகித்தார். 2011ல் அ.தி.மு.க. ஆட்சி வந்ததும், பொன்முடிக்கு எதிராக வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு தொடர்ந்தது.

அதில், “ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வருமானத்துக்கு அதிகமாக ரூ.175 கோடி சொத்து சேர்த்ததாக தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்த வழக்கில் பொன்முடியின் மனைவி விசாலாட்சியும் குற்றவாளியாக சேர்க்கப்பட்டார்.

இருப்பினும் இந்த வழக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அ.தி.மு.க. தொடர்ந்துள்ளது என பொன்முடி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கை விரிவாக விசாரணை நடத்திய விழுப்புரம் சிறப்பு நீதிமன்றம், பொன்முடி மற்றும் அவரது மனைவியை விடுதலை செய்து கடந்த 2016ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தீர்ப்பு வழங்கியது.

சிறப்பு நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு எதிராக 2017ல் லஞ்ச ஒழிப்புத்துறை சென்னை உயர் நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தது. வழக்கை நீதிபதி ஜி. ஜெயச்சந்திரன் விசாரித்து வந்த நிலையில், இந்த வழக்கில் பொன்முடி மற்றும் அவரது மனைவி இருவரும் குற்றவாளி என உத்தரவிட்டு மூன்று ஆண்டுகள் சிறை தண்டனையும், தலா ரூ.50 லட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

இந்நிலையில் இந்த வழக்கில் பொன்முடி மற்றும் அவரது மனைவி விசாலாட்சி ஆகியோர் தரப்பில் கடந்த 3-ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டன.

இந்நிலையில் மேற்கண்ட இரு மனுக்களும் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதி சதீஷ் சந்திர சர்மா அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தபோது, இந்த விவகாரத்தில் பொன்முடி தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் ஏற்றது.

மேலும் வழக்கில் வழங்கப்பட்ட சிறை தண்டனை என்பது மூன்று வருடம் தான் என்பதால் பொன்முடி சிறையில் சரணடைவதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. மேலும் இந்த உத்தரவு என்பது இதே வழக்கில் தொடர்புடைய அவரது மனைவி விசாலாட்சிக்கும் பொருந்தும் என நீதிபதி உத்தரவிட்டார்.



புதுதில்லியில் நேற்று முன்தினம் (13.01.2024)ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்களை தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கே.ஜெயக்குமார், வைகோ, கே.சுப்பராயன், எஸ்.வெங்கடேசன், டி.ரவிக்குமார், கே.நவாஸ் கனி, ஏ.கே.பி. சின்னராஜ் மற்றும் தமிழ்நாடு அரசின் புதுதில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் ஆகியோர் சந்தித்து, புயல் மற்றும் மழை வெள்ள பாதிப்புகளை சீரமைத்திட ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு அரசு கோரிய நிவாரண நிதியினை விரைந்து வழங்கிட வலியுறுத்தி கோரிக்கை மனுவினை அளித்தனர்.

# அய்யன் திருவள்ளுவர் விருது - தந்தை பெரியார் - டாக்டர் அம்பேத்கர் விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன.15-

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழறிஞர்களுக்கு அய்யன் திருவள்ளுவர் விருது மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் தந்தை பெரியார் மற்றும் டாக்டர் அம்பேத்கர் விருதுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.1.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் தமிழ் மொழிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த 7 தமிழறிஞர்களுக்கு அய்யன் திருவள்ளுவர் விருது மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

மேலும், சமூக நீதிக்கான "தந்தை பெரியார் விருதினை சுப. வீரபாண்டியனுக்கும், டாக்டர் அம்பேத்கர் விருதினை பி.சண்முகம் அவர்களுக்கும் வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ்ப் புலவர்களையும், தமிழறிஞர்களையும் பெருமைப்படுத்தும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தைத் திங்கள் இரண்டாம் நாளை திருவள்ளுவர் திருநாள் எனக் கடைப்பிடிக்க ஆணையிட்டார். மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னையில் வள்ளுவர் கோட்டம் உருவாக்கப்பட்டதோடு, கன்னியாகுமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் தொன்மையும், இலக்கிய வளமும் நிறைந்த தமிழ் மொழியானது 2004-ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசும், தமிழறிஞர்களையும், தமிழ்ச்சான்றோர்களையும் சிறப்பிக்கும் விதமாக, மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11-ஆம் நாள், அரசின் சார்பில் ஆண்டுதோறும் 'மகாகவி நாளாக' கடைப்பிடிக்கப்படும் என்று அறிவித்து செயல்படுத்தி வருகிறது, தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில், "இலக்கிய மாமணி விருது" என்ற புதிய விருது தோற்றுவிப்பு, ஞானபீடம், சாகித்ய அகாடமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள் பெற்ற எழுத்தாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு மூலமாக கனவு இல்லம் வழங்கும் திட்டம், தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழறிஞர்களை சிறப்பிக்கும் வகையில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 2024ஆம் ஆண்டுக்கான அய்யன் திருவள்ளுவர் விருது தவத்திரு பாலமுருகனடிமை சுவாமி அவர்களுக்கும், 2023ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா விருது பத்தமடை பரமசிவம் அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராசர் விருது உ.பலராமன் அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது கவிஞர் பழநிபாரதி அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது எழுச்சிக் கவிஞர் ம. முத்தரசு அவர்களுக்கும், தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது பேராசிரியர் எஸ். ஜெயசீல ஸ்டீபன் அவர்களுக்கும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் இரா. கருணாநிதி அவர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, சிறப்பித்தார்.

இவ்விருதுகளைப் பெறும் விருதாளர்களுக்கு விருதுத்தொகையாக தலா இரண்டு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்புச் செய்யப்பட்டது.

மேலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 2023–ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருது திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவரும், தந்தை பெரியாரின் பற்றாளருமான தமிழ்நாடு அரசின் சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் சுப. வீரபாண்டியன் அவர்களுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 2023–ஆம் ஆண்டிற்கான டாக்டர் அம்பேத்கர் விருது 32 ஆண்டுகாலமாக மலைவாழ் மக்கள் சங்கத்தின் தலைவராக பணிவகித்து மலைவாழ் மக்களின் நலனுக்காக பாடுபட்டு வரும் பி. சண்முகம் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். இவ்விருதுடன் விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக தலா 5 இலட்சம் ரூபாய், தங்கப் பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்புச் செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி ஜி. லட்சுமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இரா. செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர் முயற்சிகளின் பயனாக

# தமிழ்நாட்டிற்கு விரைவில் வெள்ள நிவாரணத் தொகை கிடைக்க வாய்ப்பு!

## ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா உறுதி!

சென்னை, ஜன.15-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொடர் முயற்சிகளின் பயனாக ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வெள்ள நிவாரணத் தொகையை விரைவில் விடுவிப்பதாக தெரிவித்துள்ளார்.

கடந்த 2023 டிசம்பர் 3, 4 ஆகிய நாட்களில் “மிக்ஜாம்” புயல் ஏற்படுத்திய தாக்கத்தால், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் அகிய மாவட்டங்களில் இதுவரை வரலாற்றில் இல்லாத அளவிற்கு 77 சென்டி மீட்டர் பெருமழை பெய்து பெருகிய வெள்ளத்தால் மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டது.

முதலமைச்சர் மிக்ஜாம் புயல் பற்றிய அறிவிப்பு வந்தது முதல் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் அனுப்பி மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தினார்கள். வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துவந்து மூன்று வேளையும் உணவு தந்து தக்க உதவிகளை செய்ததுடன் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 6.000 நிவாரண உதவி வழங்கினார்கள்.

ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங், 7.12.2023 அன்று வருகை தந்து, சேதப் பகுதிகளை ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்டார்கள். பின்னர் தலைமைச் செயலகத்திற்கு வந்து முதலமைச்சர் அவர்களை சந்தித்து, ஒன்றிய அரசு உரிய உதவிகளை வழங்கும் என்று உறுதி அளித்தார்.

அதன்பின், ஒன்றிய அரசு அலுவலர் குழு சேத மதிப்பீடுகளை ஆய்வு செய்ய சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சேதப்பகுதிகளை பார்வையிட்டு தமிழ்நாட்டின் அரசின் நிவாரணப் பணிகளை பாராட்டியதுடன், ஒன்றிய அரசுக்கு அறிக்கை அளித்து போதிய நிவாரண நிதி விரைவில் கிடைக்க ஆவண செய்வதாக உறுதி அளித்தார்கள்.

அதன் பின், தூத்துக்குடி, தென்காசி, நெல்லை, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களில்17.12.2023, 18.12.2023 ஆகிய நாட்களில் மட்டும் 200 ஆண்டுகளில் இல்லாத கடுமையான மழை பெய்து ஏற்பட்ட வெள்ளத்தால், மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டது. முதலமைச்சர் அவர்களும், அமைச்சர்களும், அதிகாரிகளும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவரகள் 19.12.2023 அன்று, புதுடில்லி சென்று பிரதமர் அவர்களை சந்தித்து தமிழ்நாட்டின் மழைவெள்ளச் சேதங்களுக்கு உடனடியாக தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.37,907 கோடி நிவாரண உதவி வழங்குமாறு கோரி கடிதத்தை நேரில் வழங்கினார்கள்.

அதன் பிறகு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 4.1.2024 அன்று புதுடில்லி சென்று பிரதமர் அவர்களை சந்தித்து, தமிழ்நாட்டின் வெள்ள பாதிப்பு நிலவரங்களை எடுத்துக் கூறி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருச்சி மாநகருக்கு பிரதமர் அவர்கள் வருகை தந்தபோது சந்தித்து மழை வெள்ள நிவாரண நிதியை விரைவில் விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டதை நினைவூட்டி, உரிய நிவாரண உதவிகளை விரைவில் வழங்கி உதவுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

நேற்று முன்தினம் (13.1.2024) தமிழ்நாடு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு டி.ஆர். பாலு அவர்கள் தலைமையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களை நேரில் சந்தித்து முதலமைச்சர் அவர்கள் கோரியுள்ள நிவாரணத் தொகையான ரூ.37,907 கோடியை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தினர். அது தொடர்பான மனுவையும் அவர் ஒன்றிய அமைச்சரிடம் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து இன்று, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் 27.1.2024.க்குள் தமிழ்நாட்டிற்கு நிவாரணத்தொகை விடுவிக்கப்படும் என்று உறுதி அளித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் தொடர் நடவடிக்கைகளின் காரணமாக ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சரின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## தென் மாவட்ட மழை வெள்ள மீட்பு நடவடிக்கைகளில்

# தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செயல்பட்டுள்ளது!

## ஒன்றிய அரசின் குழுவினர் பாராட்டு!

தூத்துக்குடி, ஜன. 15 –

தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடந்த டிசம்பர் 17 மற்றும் 18ம் தேதிகளில் கனமழை கொட்டி தீர்த்தது. கனமழையால் நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. கடந்த 19ம் தேதி டெல்லியில் பிரதமர் நரேந்திரமோடியைச் சந்தித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மழை பாதிப்புகள் குறித்து எடுத்துரைத்து வெள்ள நிவாரண நிதியாக 37 ஆயிரத்து 907 கோடி ரூபாயை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தொடர்ந்து மழை பாதிப்புகளை பார்வையிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மழையால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் குடும்பத்தினருக்கு 6 ஆயிரம் ரூபாயும், குறைந்த பாதிப்புள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு ஆயிரம் ரூபாயும் நிவாரணமாக அறிவித்தார்.

இந்நிலையில் ஒன்றிய அரசின் குழுவினர் டிசம்பர் 20 மற்றும் 21 ஆம் தேதிகளில் தூத்துக்குடி மற்றும் நெல்லையில் ஆய்வு மேற்கொண்டனர்.

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் மழை பாதிப்புகளைப் பார்வையிட்டார். இருப்பினும் ஒன்றிய அரசு நிவாரண நிதியை இதுவரை வழங்கவில்லை. இந்நிலையில் கனமழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மற்றும் நெல்லை மாவட்டத்தில் ஒன்றிய அரசின் குழுவினர் இரண்டாவது முறையாக ஆய்வு செய்து வருகின்றனர்.

தேசிய பேரிடர் மேலாண் குழுவின் ஆலோசகர் கே.பி.சிங் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆய்வு செய்தனர். தொடர்ந்து இந்தக் குழுவினர் திருநெல்வேலி மாவட்டத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

ஒன்றிய அரசின் குழுவினர் நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் கார்த்திகேயன் மற்றும் அதிகாரிகளுடன் மழை பாதிப்பு குறித்து கேட்டறிந்தனர். தொடர்ந்து ஒன்றிய அரசின் குழுவினர் இரண்டு குழுக்களாகப் பிரிந்து மழைப்பாதிப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்து வருகின்றனர். கருப்பன்துறை பகுதியில் ஒன்றியக் குழுவினர் ஆய்வு செய்தனர்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய ஊரக வளர்ச்சி துறை கூடுதல் இயக்குனர் கே.எம்.பாலாஜி, தென் மாவட்ட மழை வெள்ள மீட்பு நடவடிக்கைகளில் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்பட்டுள்ளதாக பாராட்டுத் தெரிவித்தார்.

ஒன்றிய அரசின் குழுவினர் மழையால் சேதமடைந்த சாலைகள், குளங்கள், விளைநிலங்கள், சேதமடைந்த பயிர்கள் உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதேபோல் சீவலப்பேரி பகுதியில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டப்பகுதியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் ஒன்றிய அரசின் குழுவினர் பார்வையிட்டு ஆய்வு செய்கின்றனர்.

# திராவிட மாடல் அரசு 51

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**

## தமிழ்நாடு என்றொரு ‘டாலர் தேசம்!’






இந்தியாவுக்குப் பல துறைகளில், பல விஷயங்களில் தமிழ்நாடு ஒரு வழிகாட்டி மாநிலமாக இருக்கிறது என்பதைப் புதிதாக யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. 1920ஆம் ஆண்டு, **‘தென்னிந்திய வேலையளிப்போர் கூட்டமைப்பு’** எனப்படும் தொழிலதிபர்கள் அமைப்பு தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. அதன் காரணமாக இன்று தமிழ்நாடு பெற்றிருக்கும் வளர்ச்சி கண்கூடு.

2021 மே மாதம் பொறுப்பேற்ற **‘திராவிட மாடல் அரசு’** கொண்டிருக்கும் முக்கிய இலக்குகளில் ஒன்று, ‘டிரில்லியன் டாலர் தமிழ்நாடு’ எனும் கனவு. அதை நனவாக்கும் விதமாக, கடந்த 7 மற்றும் 8 தேதிகளில், சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு-2024.

தலைமைத்துவம், வளங்குன்றா வளர்ச்சி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கருப்பொருள்களில் நடத்தப்பட்ட இந்த மாநாட்டில், தமிழ்நாட்டின் அடுத்த 20 ஆண்டு கால வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது.

### மழையாகக் கொட்டிய முதலீடுகள்

நம் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ பொறுப்புக்கு வந்தது முதல், கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழ்நாட்டின் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் பணியின், முன்களப் பணியாளராக, முதலமைச்சரே துபாய், சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள அரசு அதிகாரிகள், தொழில்துறையினர் ஆகியோரைச் சந்தித்து முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற்று வந்தார்.

அந்த நம்பிக்கையின் வெளிப்பாடுதான், இந்த மாநாட்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்சு, ஜெர்மனி, டென்மார்க், சிங்கப்பூர் மற்றும் தென்கொரியா ஆகிய 9 நாடுகள் பங்குதாரர் நாடுகளாகவும், மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தாய்பெய் பொருளாதார மற்றும் கலாசார மையம் ஆகியவை சர்வதேசப் பங்குதாரர்களாக தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்பட்டன.

இந்த மாநாட்டில், முன்னெப்போதும் இல்லாத அளவில் 6 இலட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் தமிழ்நாட்டுக்குக் கிடைத்துள்ளன. இவற்றின் மூலம் 26 இலட்சத்து 90 ஆயிரத்து 657 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

### முதலீடுகளை ஈர்க்கும் இருமுனை

‘ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர்’ அளவுக்கு தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை உயர்த்த, உலகளாவிய முதலீடுகள் வேண்டும். அவற்றை ஈர்ப்பதற்காக, தமிழ்நாடு அரசு ’இருமுனை அணுகுமுறை’யைப் பயன்படுத்துகிறது. உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடுகளை ஈர்ப்பது ஒரு முனை என்றால், இன்னொரு முனையில், வேலைவாய்ப்பு மிகுந்த முதலீடுகளை ஈர்க்க வேண்டும்.

அதனால்தான் ஒரு பக்கம், மூலதனம் நிறைந்த மின்னணுப் பொருட்கள் உற்பத்தி, மின்சார வாகனங்கள், சோலார் பி.வி. செல்கள் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற துறைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்துகிறது கழக அரசு. இன்னொரு முனையில், ஜவுளி மற்றும் ஆடைகள், காலணிகள் மற்றும் தோல் பொருட்கள், உணவு பதப்படுத்துதல் போன்ற வேலைவாய்ப்பு நிறைந்த துறைகளில் முதலீடுகள் கோரப்படுகின்றன.

இந்தப் பின்னணியில், மாநாட்டின் முக்கிய நிகழ்வாக ‘தமிழ்நாடு குறைக்கடத்தி (செமிகன்டக்டர்) மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் கொள்கை’, ‘பொது - தனியார் கூட்டாண்மைக் கொள்கை’ மற்றும் டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான செயல்திட்ட அறிக்கை ஆகியவை முதலமைச்சரால் வெளியிடப்பட்டன.

### வாங்குவோர் விற்பனையாளர் சந்திப்பு

இந்த மாநாட்டில், பன்னாட்டு முதலீடுகளை ஈர்ப்பதுடன், உள்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களும் பயனடையும் வகையில் **‘வாங்குவோர் விற்பனையாளர் சந்திப்பு’** நடைபெற்றது. இதில், 20-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள், உள்நாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொண்டனர்.

அதன் பலனாக, 174 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களிடமிருந்து 50.70 இலட்சம் அமெரிக்க டாலருக்குக் கொள்முதல்கள் செய்யப்பட்டுள்ளன. இவற்றில், 19.55 இலட்சம் அமெரிக்க டாலர்கள், 73 புதிய முதல்முறை ஏற்றுமதியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளன என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

போலவே, தமிழ்நாட்டின் புத்தொழில்களுக்கான (ஸ்டார்ட் அப்) நிதி வழங்கும் ‘டான்ஃபண்ட்’ இணையதளம் தொடங்கி வைக்கப் பட்டது.

காகிதத்தில் கையெழுத்தான இந்த முதலீடுகளை, செயல்பாட்டு வடிவத்துக்குக் கொண்டு வருவதற்கும், அடுத்தடுத்த முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கும் சிறப்புக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மாநாட்டின் நிறைவு விழாவில் பேசிய அவர், “எங்கள் மாநிலத்தில் முதலீடு செய்ய வரும் அனைவரையும் நான் தொழில்முனைவோராக மட்டுமல்ல. தமிழ்நாட்டின் நல்லெண்ணத் தூதுவர்களாகப் பார்க்கிறேன்” என்றார். நிச்சயமாக அந்தத் தூதுவர்கள், இந்த திராவிட மாடல் அரசில் உலகத்தைத் தமிழ்நாட்டுக்குத் தேடி வரச் செய்வார்கள்!

...சாதனை தொடரும்


### ‘உலக முதலீட்டாளர்கள் மாநாடு-2024’ சில சிறப்புகள்!

- **7** நாடுகள் தங்களது சர்வதேச அரங்குகளை அமைத்திருந்தன.
- **8** அரங்குகள், தமிழ்நாட்டின் பெருந்தொழில்கள் வளர்ச்சி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக அமைக்கப்பட்டிருந்தன.
- **23** துறைகளைச் சேர்ந்த 41 புத்தொழில் விற்பனையகங்கள் அமைக்கப்பட்டிருந்தன.
- **26** தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.
- **30**-க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.
- **150**-க்கும் மேற்பட்ட பல்வேறு துறை வல்லுநர்கள் கலந்துகொண்ட கருத்தரங்குகள் நடைபெற்றன.
- **701** கல்லூரிகளில் மாநாட்டு நிகழ்ச்சிகளை நேரலையில் காண ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- **20,000**-க்கும் மேற்பட்ட தொழில் நிறுவனப் பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள், வெளிநாட்டுத் தூதர்கள், கல்லூரி மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த முதலீட்டாளர் மாநாட்டில், தமிழ்நாட்டின் தொழில் கட்டமைப்புகள் பாராட்டப்பட்டதுடன், ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’, ‘நான் முதல்வன்’ திட்டம் போன்ற திராவிட மாடல் அரசின் முன்னெடுப்புகளை ரிசர்வ் வங்கி முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் போன்றவர்கள் பாராட்டியது மிக முக்கியமான சிறப்பம்சம்!

---

## மெய்யியலின் பெருங்கனவு சோக்ரடீஸ்!




‘தத்துவம் என்று அழைக்கப்படும் மெய்யியல் என்பது அறிவின் மீதான காதல்’ என்பார் பேரறிஞர் அண்ணா. தத்துவ அறிவு, தனிமனிதரின் சிக்கலைத் தீர்க்கும் திறனை மேம்படுத்துகிறது. கருத்து விவாதங்கள், தர்க்க நடைமுறை போன்றவற்றை மேம்படுத்திக்கொள்ள உதவுகிறது.

எம்.எஸ்.எம்.அனஸ், சோக்ரடீசை முன்வைத்து ‘மெய்யியல் என்னும் பெருங்கனவு’ நூலில் தத்துவ விசாரணைகளில் பல்வேறு கோணங்களை நம்மிடம் காட்சிப்படுத்துகிறார். இதை மெய்யியலின் கருவூலமான கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறார். சமய, அரசியல் பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் இந்த நூல் அலசுகிறது. அன்றாட வாழ்வில் நாம் பேசும் பகுத்தறிவு வாதம், ஒழுக்கவியல் ஆகியவற்றில் நமது தத்துவப் பார்வையை மேம்படுத்த இந்த நூல் முன் நிற்கும்.

மன்னராட்சி காலத்திலான சோக்ரடீசின் விமர்சனங்கள், மக்களாட்சி காலத்திலும் பொருத்தமானதாக இருப்பதை நூலை வாசிக்கையில் அறிந்து கொள்ளமுடியும். தமிழ்நாட்டில் தந்தை பெரியார் முதல் கலைஞர் வரை சோக்ரடீசின் சிந்தனைகளுக்குத் தந்துள்ள முக்கியத்துவத்தையும் இந்த நூல் விவரிக்கிறது. இந்த நூலை அடையாளம் பதிப்பகம் ரூ.260 விலையில் வெளியிட்டுள்ளது.

---

## :ப்ளாஷ்பேக்



### கலைஞர் மடியில்!



செல்வராஜ்

1949 ஆம் ஆண்டு செப்டம்பரில் தி.மு. கழகம் தொடங்கப்பட்ட நான்காவது மாதத்திலேயே அறிஞர் அண்ணா ஆணைப்படி கணியூரில் கிளைச் செயலாளர் கே.ஏ.முருகேசன் மற்றும் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஆகியோர் வரவேற்புக் குழு பொதுக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்றைய நாளில் தலைவர் கலைஞர் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் பணிச்சுமை மற்றும் உடல் நலிவால் கலந்து கொள்ள இயலவில்லை. அதனால் 1950 ஏப்ரல் 14-இல் கணியூரில் தி.மு.க பொதுக்கூட்டத்தில் தலைவர் கலைஞர் கலந்து கொண்ட போது எடுத்துக்கொண்ட 73 ஆண்டுகள் பழமையான புகைப்படம் இது. முன் வரிசையில் இடமிருந்து வலமாக அப்துல் ஜப்பார், கழக மூத்த பெரியவர் எஸ்.வி.லிங்கம், அடுத்து திராவிடப் பண்ணை முத்துக்கிருஷ்ணன், தலைவர் கலைஞர் அவர் மடியில் 9 வயது சிறுவனாக நான், அதற்கடுத்து என் தந்தையார் கிளைச் செயலாளர் கே.ஏ.முருகேசன், இசை முரசு நாகூர் ஹனிபா.

**-டா1க்டர். செல்வராஜ், ஓய்வுபெற்ற பேராசிரியர், கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033 –24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### பெரியார்- அண்ணா பாசப்பிணைப்பு!

**1968 செப்டம்பர் 10-ஆம் தேதி சிகிச்சைக்காக அமெரிக்கா புறப்பட்டார் அண்ணா. மிகுந்த சோகத்துடன் இருந்த பெரியார், விமான நிலையத்துக்குப் போகலாம் எனக் கேட்கிறார். ‘நேரம் ஆகிவிட்டது, சந்திக்க முடியாது’ என்கிறார் ஆசிரியர் கி.வீரமணி. விமானத்தையாவது பார்த்துவிட்டு வரலாம் எனப் புறப்பட்டார் பெரியார். தனக்கு முன்பே விமான நிலையம் வந்துவிட்ட பெரியாரைப் பார்த்து அண்ணாவுக்கு அதிர்ச்சி. ஏனெனில், அப்போதுதான் மருத்துவமனையில் பார்த்துவிட்டுத் திரும்பியிருந்தார் பெரியார். பாசத்தில் பெரியாருக்கு வயது மறந்தது. அண்ணாவுக்கு உடல்நிலை குன்றியது மறந்தது.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 360




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131